விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 277 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 05 வெள்ளிக்கிழமை (22.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## மன்னாரை வந்தடைந்த திலீபன் ஊர்திப் பவனி



(மன்னார்)
தியாக தீபம் திலீபனின் 36 வது ஆண்டு நிறைவை முன் னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் "திலீ பன் வழியில் வருகி 15

## ஜனாதிபதி செயலகத்துக்கு பாராளுமன்றம் அடிபணியாது

### லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி தெரிவிப்பு




(கொழும்பு)
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை அறிக்கை பாராளுமன் றத் துக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் தலையிட ஜனாதிபதி செய லகத்துக்கு அதிகாரம் இல்லை.

பாராளுமன்றம் ஜனாதி பதி செயலகத்துக்கு கட் டுப்பட்டு நடக்க முடி யாது என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரி யெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று வியாழக்கிழமை காலை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமை யில் கூடியது. பிரதான நட வடிக்கையாக சபாநாய கரின் அறிவிப்பு இடம்பெற்றது. 02

# திலீபனின் நினைவேந்தலை யாழில் தடை செய்க

## பொலிஸார் மீண்டும் மனுத் தாக்கல் இன்று நீதிமன்ற கட்டளை



(யாழ்ப்பாணம்)
தியாகி திலீபன் நினைவு நாள் அனுஷ்டிப்பு வன்முறையைத் தூண்டும் அபாயமுள்ளதால் உடனடியாக நினைவு நிகழ்வுகளை தடை செய்ய வேண்டுமென யாழ்ப்பாணம் நீதவான் நீதி மன்றத்தில் பொலிஸார் மீண்டும் மனுத்தாக்கல் செய்துள்ளனர். (15ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(கரணவாய்)
வடமராட்சி கிழக்கு, தாழையடிப் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் மருதங்கேணி வடக்கு, தாழை யடியைச் சேர்ந்த சின்னையா தனபால 15

## சுவிஸிலிருந்து வந்த இளம் குடும்பஸ்தர்

### வவுனியாவில் சடலமாக மீட்பு



(வவுனியா)
சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் வவுனியாவில் 15

## அமெரிக்க ஜனாதிபதியுடன் ரணில் கலந்துரையாடல்



(நியூயோர்க்)
அமெரிக்க ஜனாதி பதி ஜோ பைடனும் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க வும்நியூயோர்க் 15

## கொழும்பு - கே.கே.எஸ் ரயில் பயணம் 2 மணி நேரமாக குறைவடையும்

### அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)
"இந்திய கடன் திட்டங்களின் கீழ் 15 மில்லியன் டொலர்கள் செலவில் நவீனமயமாக்கப்படும் சமிக்ஞை அமைப்பு நிறுவப்பட்ட தன் மூலம், கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கான மொத்த பயண நேரத்தை 15

## கொழும்பில் துப்பாக்கிச் சூடு

### இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)
கொழும்பு அவிசாவளை இஹல தல்துவ, குருபஸ் கொட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு முச்சக்கர 15

## வெளிநாடு அனுப்புவதாகக் கூறி வடக்கு - கிழக்கில் பலரிடம் பண மோசடி

### கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

(கொழும்பு)
இலங்கையில் இருந்து வெளிநாடு அனுப்பி வைப்ப தாகக் கூறி குறிப்பாக வடக்கு - கிழக்கு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் உள்ள மக்களி டம் பணம் பெற்று ஏமாற்றிய ஆட்கடத்தல்காரன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலை யத்தில் கைது செய்யப்பட்டுள் ளார்.

இவர் போலியான கடவுச் சீட்டு மூலம் நாட்டை விட்டு வெளியேற முற்பட்ட போது கைது செய்யப் 02

## உயர்தரப் பரீட்சையை பிற்போடுவது உறுதி

அடுத்த வாரம் திகதி அறிவிப்பு

03 பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

இதன்போது சபாநாயகர் தனது அறிவிப்பில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை 2021.02.24 ஆம் திகதி பாராளுமன்ற செயலாளருக்கு கையளிக்கப்பட்டது. அத்துடன் அந்த அறிக்கை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் பயன்படுத்த பாராளுமன்ற நூலகத்தில் வைக்குமாறு ஜனாதிபதி செயலகம் அறிவித்திருந்தது.

அதேபோன்று விசாரணை அறிக்கையில் இருக்கும் சாட்சியாளர்களை பாதுகாக்கவும் அதன் இரகசிய சாட்சியங்கள் அடங்கிய தகவல்கள் பொது மக்களுக்கு வெளிப்படுத்த முடியாது.

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் கண்காணிப்பின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் பயன்படுத்த முடியும் என 2023.09.12ஆம் திகதி ஜனாதிபதி செயலாளர் மூலம் மீண்டும் அறிவித்திருக்கிறார் என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பி குறிப்பிடுகையிலேயே லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் தலையிட ஜனாதிபதி செயலகத்துக்கு அதிகாரம் இல்லை.

பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு கையளிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் தீர்மானிக்க வேண்டியது செயலாளர் நாயகமாகும். அவ்வாறு இல்லாமல் அவர் ஜனாதிபதி செயலகத்திடம் கேட்கத் தேவையில்லை.

அத்துடன் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் இரகசிய தகவல் இருப்பதாக தெரிவிக்கிறீர்கள். ஆனால் இந்த சாட்சியங்கள் அனைத்தும் திறந்த விசாரணை குழுவிலே தெரிவிக்கப்பட்டன. அப்படியானால் அந்த சாட்சியங்கள் எவ்வாறு இரகசியமான தகவல் என தெரிவிக்க முடியும். அதனால் பாராளுமன்றம் ஜனாதிபதி செயலகத்துக்கு அடிபணிந்து செயற்படக்கூடாது. பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாக்க வேண்டும் என்றார். (ம-7)

## வெளிநாடு...

பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவர் முல்லைத்தீவு மாவட்டத்தின் உடையார் கட்டுப் பகுதியில் பாரிய பண்ணை ஒன்றினை நிறுவி அதில் சிலருக்கு வேலை வாய்ப்பினை வழங்கி வந்துள்ளார்.

இந்த வேலையுடன் வெளிநாட்டிற்கு ஆட்களை ஏற்றுவதாக தெரிவித்து, உடையார் கட்டுப்பகுதியினை சேர்ந்த சுமார் 10 பேருக்கு மேற்பட்டவர்களிடம் சராசரி பத்து இலட்சம் ரூபா பணத்தினை பெற்றுள்ளார்.

இவ்வாறு யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும், மன்னாரிலும், மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களிலும் பல இளைஞர்களை வெளிநாட்டிற்கு அனுப்புவதாக ஏமாற்றி பாரியளவிலான பண மோசடியினை மேற்கொண்டுள்ளார்.

பல இடங்களில் வெளிநாட்டிற்கு அனுப்புவதாக கூறி பணமோசடியில் ஈடுபட்ட வேளை பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

பல மாவட்டங்களில் இவரின் முகவரிகள் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, பதுளை, கொழும்பு போன்ற முகவரிகளில் தங்கியுள்ள பதிவுகள் காணப்படுகின்றன.

வெளிநாட்டிற்கு குறிப்பாக கனடாவிற்கு ஏற்றுவதாக தெரிவித்து ஒரு குழுவாக ஆட்களை சேர்ப்பது அவர்களிடம் இருந்து முதற்கட்டம் ஒருதொகை பணத்தினை பெற்றுக்கொண்டு அதில் இருந்து தனக்கு விசுவாசமான ஒருவரை அழைத்துக் கொண்டு மத்திய மலைநாட்டு பகுதிகளுக்கு சென்று அவரை போட்டோ எடுத்து அதனை கிராபிக் செய்து கனடாவில் இறங்கிவிட்டால் போல் கனடா நாட்டின் புகைப்படங்களை இணைத்து செய்து அதனை அவரின் முகநூலில் போட்டு அவரை மறைத்து வைத்துக்கொண்டு மற்றவர்களை நம்பவைத்து பணம் பறிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். இவ்வாறு ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஒவ்வொரு தொலைபேசி இலக்கங்களை கொடுத்து பணத்தினை வாங்கிவிட்டு பின்னர் தொலைபேசி அழைப்பினை துண்டித்து விடுதல் போன்ற நடவடிக்கையில் ஈடுபட்ட குறித்த நபரினை நம்பி பலர் பணம் கொடுத்து ஏமாந்துள்ள நிலையில் பொலிஸாரிடம் இவர் தொடர்பான விபரங்கள் வழங்கப்பட்ட போதும் அவரை இதுவரை கைது செய்யவில்லை.

இந்த் நிலையில் தலைமறைவான நிலையில் இருந்த குறித்த ஆட்கடத்தல்காரர் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக வெளிநாட்டிற்கு பயணிக்க இருந்த வேளை கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)


### பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரல்

21.09.2023 நேற்றைய வலம்புரி பத்திரிகையின் 4 ஆம் பக்கத்தில் வெளியான வேலணை ப.தெ.வ.அ.கூ சங்கத்தின் பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணபத்தில் குறியீட்டு இலக்கம் 101/09 என்பதற்கு பதிலாக தவறுதலாக 109/09 என பிரசுரமாகிவிட்டது. எனவே தயவுசெய்து அதை 101/09 என திருத்தி வாசிக்கவும்.

(C-7300)

வேலணை கிழக்கு, 1 ஆம் வட்டாரம். — தலைவர், வேலணை ப.தெ.வ.அ.கூ. சங்கம்


## பரிசளிப்பு விழா

கோண்டாவில் இந்துக் கல்லூரியின் 2023 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவானது இன்று காலை 9.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் நடேசு தயாளன் அவர்கள் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ம-7)


### வலம்புரி


விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378

076 097 3127


## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 03 . 1940



இறப்பு 21 . 09 . 2023

### முருகேசு தில்லையம்பலம்

வைரவர் கோயிலடி ஆனைக்கோட்டை மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட முருகேசு தில்லையம்பலம் அவர்கள் நேற்று *(21.09.2023)* வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற அருணி - கற்பகம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும் நாகபூரணத்தின் அன்புக் கணவரும் பேரம்பலம், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், சிற்றம்பலம், கிளி மற்றும் விஜயகாந்தி ஆகியோரின் சகோதரரும் சசிகலா (ஆசிரியர் - யா/வட்டு மத்திய கல்லூரி), திலீப்குமார் (உரிமையாளர் நமசிவாயம் ஸ்ரோர்ஸ் அல்வாய்), சிவகுமார் (மருத்துவர் - ஜப்பான்), சாந்தகுமார் (ஆசிரியர் - யா/வட்டு மத்திய கல்லூரி), மோகனகுமார் (அஞ்சல் அதிபர் - யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற கஜேந்திரகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாந்தை கிழக்கு பிரதேச செயலகம்), முகுந்தன் (மருத்துவர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் துவாரகா, விதுரன், சதுர்சிகா, ஆதீஷன், அனுஷ்கவி, லதுசாந், ரிஷிகா, ஆராத்திகா, ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(22.09.2023)* வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1 மணியளவில் கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே : 077 556 5060 (17177) தகவல்: குடும்பத்தினர்


### யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்

**பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் - 2023**

இடம் : பாடசாலை மண்டபம்

காலம் : 2023.09.23 சனிக்கிழமை

நேரம் : மு.ப 8.30

**நிகழ்ச்சி நிரல்**

- இறைவணக்கம்
- புதிய நிர்வாக சபை தெரிவு
- நூற்றாண்டு விழா தொடர்பான கலந்துரையாடல்
- பாடசாலை பௌதீகவள விருத்தி
- ஏனைய விடயங்கள்

பழைய மாணவர்களையும் நலன்விரும்பிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C-7299) - பழைய மாணவர் சங்கம் -

### பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
- பாதுகாப்பு உத்தியோகத்தர்
  - கல்வித் தகைமை க.பொ.த (உயர் தரம்)
  - வயது — 24 இற்கு மேல்
  - ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்
  - காலை 9.00 மணியிலிருந்து 4.00 மணி வரை சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

பொது முகாமையாளர் வலம்புரி

தொ.பே : 076 097 3121


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு ரயில் என்ஜின்கள்

(கொழும்பு)

இலங்கைக்கு 10 ரயில் எஞ்சின்களை வழங்குவதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது.

கடனுதவியின் அடிப்படையில் இந்த ரயில் எஞ்சின்கள் இலங்கைக்கு கிடைப்பதாக ரயில்வே பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.டி.எஸ் குணசிங்க தெரிவித்துள்ளார்.

எஞ்சின்கள் இல்லாமையால் ரயில் போக்குவரத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் தெரிவித்தார். (நி-6)

## கோவா செய்கையை கைவிட வேண்டிய நிலை

(கொழும்பு)

கோவா செய்கையை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். தங்களது உற்பத்திக்கு உரிய விலை கிடைப்பதில்லை என்றும் கோவா செய்கையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். தற்போது, மிகக் குறைந்த விலையில் தங்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படுவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்காரணமாக தாங்கள் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக கோவா செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-6)

# ஊர்தி மீதான தாக்குதலுக்கு நீதி கோரி லண்டனில் போராட்டம்

## மழையையும் பொருட்படுத்தாது திரண்ட மக்கள்

**(லண்டன்)**

**புலம்பெயர் தமிழர்களால் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சக முன்றலில் நீதி கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**






தமிழர்களின் அறவழித் தியாகியான தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்தி மீதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மீது திருமலையில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் எதிர்ப்பு தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் லண்டனில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இப்போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

காலநிலை சீர்கேடு இருந்த போதிலும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சகத்துக்கு முன்னால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (நி-6)

## உயர்தரப் பரீட்சை திகதிகள் அடுத்த வாரம்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபையில் அறிவித்தார். அதன்படி பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மாற்றுத் திகதிகளை அடுத்த வாரம் அறிவிப்பார் எனவும் கல்வி அமைச்சர் சுசில் மேலும் தெரிவித்தார். (நி-5)

## ரூபாவின் பெறுமதி சற்று உயர்வு

(கொழும்பு)

வெளிநாட்டு நாணயங்கள் பலவற்றிற்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணயமாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 329.90 ரூபாவாகவும் கொள்வனவு விலை 318.90 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி-5)

# எரிபொருளுக்கான செலவினம் குறைந்தால் மின் கட்டணத்தை குறைக்கலாம்

## அனுருத்த நம்பிக்கை



(கொழும்பு)

நாட்டின் 70 சதவீத மின் சாரத் தேவையை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஊடாக பூர்த்தி செய்வதன் மூலம் மின் கட்டணத்தை குறைக்க முடியும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை அபிவிருத்தி செய்வதன் மூலம் எரிபொருளுக்காக செலவிடப்படும் பணத்தை நாட்டில் தக்க வைத்துக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது, கூரைகளில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின்கலங்களின் ஊடாக 685 மெகாவாட் மின்சாரமும் நிலத்தில் பொருத்தப்பட்ட சூரிய மின்கலங்களினால் 140 மெகாவாட் மின்சாரமும் காற்றாலை மின் நிலையங்களின் ஊடாக 263 மெகாவாட் மின்சாரமும் மின் கட்டமைப்பிற்கு வழங்கப்படுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார். (நி-6)

# அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்து

(நியூயோர்க்)

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் நடைபெற்று வரும் ஐ.நா பொதுச் சபை கூட்டத்தில் இலங்கை அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

இதன்படி, அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட 69 ஆவது நாடாக இலங்கை பதிவாகியுள்ளது.

ஐ.நா பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட சட்ட ஆவணத்தை கடந்த சில மாதங்களாக மேற்கொண்டு வந்தது.

2017 ஜூலை 7 அன்று நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையில் இலங்கை பங்கேற்றது.

மேலும் அதை ஏற்றுக் கொள்வதற்கு ஆதரவாக வாக்களித்த 122 நாடுகளும் உள்ளடங்கும்.

2016 ஆம் ஆண்டு ஜெனிவாவில் நடைபெற்ற திறந்த நிலை பணிக்குழு செயல்முறையில் பங்கேற்பதன் மூலம் ஒப்பந்த பேச்சுவார்த்தை செயல்முறைக்கு வழிவகுத்தது. (நி-6)

# விசர்நாய்க்கடியால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாட்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த சில வருடங்களில் நாய்கள் தவிர்ந்த ஏனைய விலங்குகள் கடித்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

விசர்நாய்க்கடியால் ஏற்படும் ரேபிஸ் (நீர் வெறுப்பு நோய் அல்லது வெறிநோய்) பற்றி அறியாமையே மரணங்கள் அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளதாக அமைச்சின் வெறிநோய் தடுப்புப் பிரிவின் வைத்திய அதிகாரி வைத்தியர் ஹேஷான் குருகே தெரிவிக்கின்றார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற முன்னேற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட வைத்திய அதிகாரி ஹேஷான் குருகே இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

கடந்த சில வருடங்களில் நாய்கள் அல்லாத விலங்குகளால் கூட மனித உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதை ஆய்வு செய்யும் போது, விசர்நாய்க்கடிக்கு ஆளானவர்களின் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளது.

ஏதேனும் விலங்கு கடித்தால் அல்லது தாக்கினால் முறையான முதலுதவி அளிக்கப்பட வேண்டும். முதலில் காயத்தினை தண்ணீர் மற்றும் சோப்பினால் குறைந்தது பத்து நிமிடங்களாவது கழுவ வேண்டும்.

வீட்டில் ஆல்கஹால் இருந்தால் பெடாடின் போன்ற அயடின் கரைசல், அறுவை சிகிச்சை ஸ்பிரிட் அல்லது ஹைட் ரஜன் பெராக்சைடு போன்ற கிருமிநாசினிகள் இருந்தால் அதனால் கழுவலாம்.

பின்னர் வைத்திய சாலைக்கு செல்லுங்கள். இதைச் செய்தால் இலங்கையில் இருந்து அனைவரும் ஹைட்ரோ போபியாவை ஒழிக்க முடியும் எனத் தெரிவித்தார். (நி-6)

## கிருஸ்ணா அடைவுகடை

**பதிவு இல J/DS/BR/472**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2022 ஆம் ஆண்டு 31.12.2022 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2023 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ஆம் திகதி (15.10.2023) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.10.2023 ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**குறிப்பு:- 2022 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.**

(17089)

இல.370.கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 490 0311
021 222 5180
077 080 4656

உரிமையாளர்,
இல.09 கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாலிபகிண்ண தொடர்

# காலிறுதிக்குள் பாசையூர் சென் அன்ரனிஸ் யங்கென்றிசியன் அணிகள் தகுதி




இளவாலை வருத்தப்படாத வாலிப சங்கம் தனது 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தும் அணிக்கு 9 பேர் உள்ளடக்கிய "வாலிப கிண்ணம்" மாபெரும் உதை பந்தாட்ட போட்டி இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இப்போட்டியில் பாசையூர் சென் அன்ரனீஸ் அணியை எதிர்த்து மல்லாகம் சிறிமுருகன் அணி மோதியது. ஆரம்பத்தில் இருந்து போட்டியை தனது கட்டுபாட்டில் வைத்திருந்த சென் அன்ரனீஸ் அணியின் வீரர்களான ஜோன் ராஜ், கலிஸ்ரர் கோலாட்டம் ஆட ஆட்டநேர முடிவில் 7:0 என்ற கோலடிப்படையில் பாசையூர் சென் அன்ரனீஸ் அணி வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

சென் அன்ரனீஸ் அணி சார்பாக ஜோன்ராஜ் 3 கோல்களையும், கலிஸ்ரர் 2 கோல்களையும் சறோன், டிவிஷன் தலா 1 கோல்களையும் பெற்று கொடுத்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக பாசையூர் சென் அன் ரனீஸ் வீரர் ஜோன்ராஜ் தெரி வானார்.

துறையூர் ஐயனார் அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிசியன் அணி மோதியது. ஆரம்பத்தில் இருந்து மிக விறுவி றுப்பாக இடம்பெற்ற போட்டியில் முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் எதிரணி கோல்கம்பங்களை மாறிமாறி ஆக்கிரமிக்க இரு அணிகளும் கோல் போடும் வாய்புக்களை தவறவிட முதல்பாதியாட்டம் இரு அணிகளும் கோல் போடாத நிலையில் 0:0 என முடிவுற்றது.

இரண்டாவது பாதியாட்டம் ஆரம்பத்திலிருந்து ஆட்டம் சூடுபிடித்தது.

எனினும் கோல் போடும் சந்தர்ப்பங்களை வீணடிக்க இரு அணிகளும் கோல் போடாத நிலையில் 0:0 என ஆட்டம் நிறைவு பெற்றது.

வெற்றியை தீர்மானிப்பதற்கான சமனிலை தவிர்ப்பு உதையில் 5:4 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி காலி றுதிக்கு நுழைந்தது யங்கென்றிசியன் அணி.

போட்டியின் ஆட்ட நாயகனாக யங்கென்றீசியன் அணியின் வீரர் டிலைக்சன் தெரிவுசெய்யப்பட்டார். (நி-6)

# உலகக் கிண்ண தொடருக்கான பாடலை வெளியிட்டது ஐ.சி.சி

## ரசிகர்களிடையே வரவேற்பு

50 ஓவர் உலகக் கிண்ண தொடர் இந்தியாவில் வரும் ஒக்டோபர் 5 ஆம் திகதி தொடங்குகிறது. இந்த தொடரில் இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து உள்ளிட்ட 10 அணிகள் கலந்து கொள்கின்றன.

உலகக்கிண்ண தொடரின் தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோத உள்ளன. இந்திய அணி தனது தொடக்க ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை சென்னையில் சந்திக்கிறது.

இந்நிலையில் இந்தியாவில் நடைபெற உள்ள உலகக் கோப்பை தொடரை பிரபலப்படுத்தும் விதமாக பாடல் ஒன்றை நேற்றுமுன்தினம் ஐ.சி.சி வெளியிட்டுள்ளது.




இந்த பாடலுக்கு 'தில் ஜாஷ்ன் போலே' என்று பெயரிடப்பட்டுள்ளது. குறித்த பாடலுக்கு பிரபல இசையமைப்பாளர் ப்ரீதம் இசையமைத்துள்ளதுடன் பாடலில் பாலிவுட் நடிகர் ரண்வீர சிங் மற்றும் இந்திய கிரிக்கெட் வீரர் சாஹலின் மனைவி தனஸ்ரீவர்மா ஆகியோர் நடித்துள்ளனர்.


தற்போது இந்த பாடல் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. (நி-6)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2919


### தாரணி




### குணா




### பரணி




### கர்ணா




### ஆறுமுகம்




### பிரியா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுடன் பெரும்பான்மையினர் சேர்ந்து வாழ முடியாத நிலைமை

## ஊர்தி தாக்கப்பட்டமை மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது

### ஈழத்தமிழர் பேரவை கண்டன அறிக்கை வெளியீடு

(லண்டன்)

**அமைதிப் போராட்டங்களுக்கும் நினைவு நிகழ்வுகளுக்கும் தடையேற்படுத்தக் கூடாது என ஐ.நா மனித உரிமை ஆணையாளர் தெரிவித்த போதும் இலங்கை இதுவரை எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.**

தியாக தீபம் திலீபனை நினைவுகூர்ந்து முன்னெடுக்கப்பட்ட ஊர்தி பவனி தாக்கப்பட்டமைக்கும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தாக்கப்பட்டமைக்கும் பிரித்தானியாவின் ஈழத் தமிழர் பேரவை கண்டனம் வெளியிட்டுள்ளது.

பெரும்பான்மையினத்தவர்கள் ஈழத்தமிழர்களுடன் சேர்ந்து வாழ மறுக்கும் நிலைமை குறித்த தாக்குதல் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரித்தானியா ஈழத் தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் அமைதிப் போராட்டங்களுக்கும் நினைவு நிகழ்வுகளுக்கும் தடை ஏற்படுத்தக் கூடாது என ஐ.நா மனித உரிமை ஆணையாளர் தெரிவித்துள்ள போதிலும் இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதிற்கு இலங்கை அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரையில் முன்னெடுக்காமை கவலையளிக்கின்றது எனவும் குறித்த பேரவை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஈழத் தமிழர்கள் இறைமையுடன் கூடிய தன்னாட்சியைப் பெற்றுக் கொள்வதற்கும் சட்ட ஒழுங்குகளுக்கு அமைய ஜனநாயக ரீதியில் வாழ்வதற்குமான நடவடிக்கைகளை ஐ.நா மனித உரிமை ஆணையகம் ஏற்படுத்த வேண்டும் எனவும் பிரித்தானியாவின் ஈழத் தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது. (நி-6)

# உரக்கொள்வனவிற்காக விவசாயிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்

(கொழும்பு)

இந்த முறை பெரும்போகத்தின் போது உரக்கொள்வனவிற்காக 12 மில்லியன் ரூபாவை விவசாயிகளின் வங்கி கணக்குகளில் வரவு வைப்பதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில், ஒரு ஹெக்டயரில் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 15 ஆயிரம். ரூபா வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச அங்கீகாரம் பெற்ற உர நிறுவனங்களால் 9 ஆயிரம் ரூபாவிற்கு வழங்கப்படும் யூரியா உரத்தில் எந்தவித விலை மாற்றமும் ஏற்படுத்தாமல் இருக்க தனியார் நிறுவனங்களும் இணங்கியுள்ளதாக விவசாய அமைச்சுதெரிவித்துள்ளது. (நி-6-33)

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# பிரதான சூத்திரதாரிகளில் மைத்திரியும் ஒருவர்

## பொன்சேகா சாடல்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் இரண்டு பிரதான சூத்திரதாரிகளில் ஒருவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என முன்னாள் இராணுவத்தளபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல்-4 முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் முன்னாள் இராணுவத்தளபதிக்கும் முன்னாள் ஜனாதிபதிக்கும் இடையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கடும் வாக்குவாதம் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

முன்னாள் இராணுவத்தளபதியால் தனது இராணுவத்தலைமையகத்தை கூட பாதுகாக்க முடியவில்லை என மைத்திரிபாலசிறிசேன தெரிவித்ததை தொடர்ந்தே இந்த வாக்குவதம் இடம்பெற்றுள்ளது.

சரத்பொன்சேகா தாக்கப்பட்ட வேளை அவரது உடல்உறுப்புகள் பாதிக்கப்பட்டன என சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள சரத் பொன்சேகா உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் இருவரில் ஒருவர் மைத்திரிபால சிறிசேன என தெரிவித்துள்ளார். (நி-6)

# உலக வங்கியின் பணிப்பாளர் யாழிற்கு திடீர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கையின்தற்போதைய நிலைமை குறித்து பாராட்டுவதாக உலக வங்கியின் பணிப்பாளர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டு வடக்கு ஆளுநரை ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நிலைமை குறித்து தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், இலங்கை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி மேற்கொண்டுள்ள சாதகமான நடவடிக்கைகள் பாராட்டப்படுவதாகவும் உலக வங்கியின் பணிப்பாளர் பாரிஸ் ஹடாட்ஜேர் வோஸ் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தின் கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு உலக வங்கி பூரண அனுசரணையை வழங்கும் எனவும் இறுதி யுத்தத்தின் பின்னர் மக்கள் மீள் குடியேறி தற்போது நிம்மதியான வாழ்க்கைக்கு திரும்புவது மிகவும் மகிழ்ச்சியை தருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கு தெரியப்படுத்தியதுடன், கல்வி, சுயதொழில், உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதில் வடக்கு மாகாணத்திற்கு ஆதரவளிக்குமாறும் உலக வங்கி பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இதன்படி, எதிர்காலத்தில் வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட மக்களின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்த உலக வங்கி பூரண ஆதரவை வழங்கும்என இலங்கை, மாலைதீவு மற்றும் நேபாளத்திற்கான உலக வங்கியின் பணிப்பாளர் உறுதியளித்தார். (நி-6)

# இராசிபலன்

22.09.2023
புரட்டாதி 05, வெள்ளிக்கிழமை
சப்தமி முற்பகல் 9.39 மணிவரை

கேட்டை பிற்பகல் 12.40 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை

சந்திராஷ்டமம்- கார்த்திகை, ரோகினி

வளவன்

**மேஷம்**: அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், சுணங்கிய காரியங்கள் மதியத்திற்கு பின்னர் நிறை வேறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்**: எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், உறவினர்களின் வருகையால் உற்சாகம் பெறுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்**: நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்**: வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் சற்று கூடும்.

**ரிஷபம்**: முக்கியமான விடயங்களை காலைப் பொழுதே நிறைவேற்றுது நன்மை தரும், கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்**: புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்**: வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்**: எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**மிதுனம்**: ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி**: விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் சுகங்களும், சந்தோசங்களும் கூடும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**தனுசு**: சோம்பலை விலக்குவது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, எதிர்பாராத காரியமொன்று நடைபெற்று இன்பம் தரலாம், கற்பனை மிகுதியான நாள்.

**மீனம்**: சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

முடியும் என்று நம்புபவன் முடித்துக் காட்டுவான்- நம்பாதவன் கெடுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நீதிப் பொறிமுறையினைக்கோரி வடக்கு- கிழக்கில் போராட்டம் முன்னெடுப்பு

(சாவகச்சேரி)

**இலங்கையின் போர்க்குற்றங்களை விசாரணை செய்வதற்கு சர்வதேச நீதிப் பொறிமுறையினை உறுதிப்படுத்தக்கோரி நேற்று வியாழக்கிழமை காலை யாழ்.கோவில் வீதியில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.**





உலக சமாதான தினத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் ஏற்பாட்டில் வடக்கு - கிழக்கு உட்பட 8 மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் "காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டும்,தமிழ் மக்களை வதைக்கும் சட்டங்களை உருவாக்காதே, இந்த நாட்டில் சுதந்திரமாக வாழ வழிவிடுங்கள், கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில் சர்வதேச கண்காணிப்பு வேண்டும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிவேண்டும்,உலக சமாதான தினத்தில் தமிழ் மக்களுக்கு சமாதானம் வேண்டும், இலங்கை அரசே உண்மை,நீதி, பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்து, மதங்கள் கடந்த மனிதத்தை நேசிப்போம், மனித உரிமைகளுக்கு மதிப்பளியுங்கள் " உள்ளிட்ட சுலோகங்களை உள்ளடக்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்ட நிறைவில் இலங்கையின் போர்க் குற்றங்களை விசாரிக்க ஐ.நா சர்வதேச நீதிப் பொறிமுறையை உறுதி செய்ய வேண்டும் எனக் கோரி ஐ.நா உயர்ஸ்தானத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது. (நி-6-30-299-285-316)

# வாள் முனையில் தொலைபேசி அபேஸ்

(கரணவாய்)

வாளுடன் வீட்டுக்குள் வந்த திருடன் ஒருவன் அங்கிருந்த பெறுமதியான தொலைபேசி ஒன்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் அல்வாய், கவிஞர் செல்லையா வீதியில் உள்ள வீடு ஒன்றில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டில் உறக்கத்திலிருந்தவர்கள் விழித்த போது வீட்டுக்குள் வாளுடன் நபர் ஒருவர் நின்றுள்ளார். இதனை அடுத்து வீட்டில் இருந்தவர் சத்தம் போட்ட நிலையில் வாளுடன் நின்ற திருடன் அங்கிருந்த பெறுமதியான தொலைபேசியை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளான்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(நி-6-60)

# திடீரென தீப்பற்றி எரிந்த பேருந்து

## மானிப்பாயில் சம்பவம்



(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாவல்கட்டு பகுதியில் பேருந்து ஒன்று நேற்று அதிகாலை தீ விபத்திற்கு உள்ளாகி முற்றாக எரிந்து கருகியுள்ளது.

இச்சம்பவம் குறித்து தெரிய வருகையில், குறித்த பேருந்து கடந்த திங்கட்கிழமை பயணிகளை ஏற்றியவாறு சுற்றுலாவிற்கு சென்றிருந்த நிலையில் நேற்று அதிகாலை மீண்டும் யாழிற்கு வந்ததையடுத்து சாரதி பேருந்தை தனது வீட்டுக்கு முன்னாள் உள்ள காணியில் நிறுத்திவிட்டு வீட்டிற்கு சென்றுள்ளார்.

பின்னர் சிறிது நேரத்தில் இரண்டு பாரிய சத்தங்கள் கேட்டது. இந்நிலையில் கடற்றொழிலுக்கு செல்வதற்கு சென்ற இளைஞர்கள் பேருந்து எரிவதை அவதானித்த நிலையில் தீயினை கட்டுப்படுத்த முயன்ற போதும் பேருந்து முற்றாக தீயில் எரிந்து கருகியது.

இயந்திர கோளாறு காரணமாக பேருந்து தீப்பிடித்து எரிந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.இது குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து தடயவியல் பொலிஸார் தடயங்களை பெற்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-33-104)

# நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கரணவாய் மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் பொதுக் கூட்டமும் கடந்த 9 ஆம் திகதி மூத்த விநாயகர் மண்டபத்தில் கரணவாய் மத்தி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். றவிகரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிர்வாகத் தெரிவில் தலைவராக பட்டய அளவையாளர் கே.ரி.சிறீஸ்கந்த சிங்கமும் செயலாளராக இளைப்பாறிய அதிபர் கே.இராமஜயம் (எம்.ஏ) மற்றும் பொருளாளராக இளைப்பாறிய முகாமையாளர் என்.தவராசா உட்பட 9 பேர் நிர்வாகசபைக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

(நி-6)



தேசிய மட்ட பளுதூக்கல் போட்டிகள் பொலநறுவையில் அண்மையில் நடைபெற்றது.குறித்த பளுதூக்கல் போட்டியில் யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களான க.அபிநயா 17 வயதுப் பிரிவில் 45 கிலோ எடைப் பிரிவில் 49 கிலோ எடையினை தூக்கி 7 ஆம் இடத்தினையும் 20 வயதுப் பிரிவில் 55 கிலோ எடைப் பிரிவில் 59 கிலோ எடையினைத் தூக்கி ரி.புளோரிஸ்ரா 5 ஆம் இடத்தினையும் திறந்த தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் அ.தினுஜன் 20 வயதுப் பிரிவில் மூன்று விதமான பளுதூக்கல் போட்டியில் கலந்து கொண்டு 280 கிலோ எடையினை தூக்கி 3 ஆம் இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆங்கில தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் ஆசிரியர் கல்லூரியில் வருடாந்த ஆங்கில தினக் கொண்டாட்ட நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ரதிலக்ஷ்மி மண்டபத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் எஸ்.லலீசன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பத்தரமுல்ல பெல்லவத்தை பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் திருமதி. எம்.ஜீவராணி புனிதா, சிறப்பு விருந்தினராக பலாலி ஆசிரியர் கல்லூரி அதிபர் எஸ். பத்மநாதன் (சோபா) மற்றும் கௌரவ விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கல்லூரி முன்னாள் விரிவுரையாளர் திருமதி. எம்.கே.எஸ் முத்துக்குமாரசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் .திருமதி

## தங்கம்மா குகநமசிவாய முதலியார்

(பூமி அம்மா, குகரதி புடைவையகம் நெல்லியடி)



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05.10.1940 | 13.09.2021 |

பிறப்போடு இறப்பு இணைந்தது எனினும்
இழப்பினை ஏற்க இயன்றதில்லை இன்றுடன்
ஈராண்டுகள் ஆனதம்மா
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து
கண்ணிமைக்கும் கணப்பொழுதினை
விட கடு கடுதியாய் கரைந்துபோன
இந்த இரண்டு ஆண்டுகளில்
உம்மை நாம் நினைக்காத பொழுதில்லை
திரும்பி வர முடியாது என்றும் தெரிந்து
அழைக்கின்றோம்.
அம்மா! அம்மா! அம்மா!

ராணி மில் வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.
077 893 7802,
077 691 2738
தகவல்-
குடும்பத்தினர்.

(சி-7298)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 204

### பிள்ளைகளின் பாசத்திற்காக தவிக்கும் வயோதிபர்

எனக்கு 77 வயது.மனைவியை இழந்து பத்து வருடங்களாகிறது. எனக்கு நான்கு மகன்கள் ஒவ்வொரு மாதமும் ஒரு மகனிடம்! இப்போது இருப்பது மூன்றாவது மகனிடம்! இன்னும் நான்கு நாட்கள் இருக்கிறது கடைசி மகனிடம் செல்ல! இப்போதிருந்தே வயதான விரல்களை கொண்டு எண்ணிக்கொண்டு இருக்கிறேன் கடைசி மருமகளிடம் செல்லும் நாட்களுக்காக! போன தீபாவளிக்கு இரண்டாவது மருமகள் வாங்கித்தந்த வெள்ளை வேட்டி பழுப்பு நிறமாகி பலநாட்கள் ஆகிவிட்டது! முதல் மகன் வாங்கித்தந்த கண்ணாடி உடைந்து மூன்று வாரங்கள் ஆகிவிட்டது.

இப்போது இருக்கும் கோபக்கார மகனிடம் கேட்டால் என்ன சொல்வானோ என்று நானும் வெறுங்கண்களோடு தடுமாறிக்கொண்டு இருக்கிறேன் கடைசி மருமகளிடம் சொல்லி தான் மாற்றிக்கொள்ள வேண்டும்! இன்னும் நான்கு நாட்கள் தான் என்பதால் எல்லோரும் வேலைக்கு போனபின்பு என்னுடைய வேட்டி ஜிப்பாக்களை துவைத்து வைத்துக்கொள்ள வேண்டும், துணி துவைக்கும் மிஷின் இருந்தாலும் என்னுடைய துணிகளை தனியாகத்தான் போடவேண்டும் என்று சொல்லி அவர்களின் ஆடையோடு கூட ஒட்டவிடாமல் ஏனோ அந்நியமாக வைத்திருக்கிறாள். கஷ்டமாக இருந்தாலும் மகனிடம் கூட எதுவும் சொல்வதில்லை.

கடைசி மருகளின் வீட்டுக்கு போக என்னுடைய உடைகளை நானே ஆர்வமாக துவைத்துக் கொண்டிருக்கிறேன். கடைசி மகன் மற்றவர்களை போல் கார், சொந்த வீடு என்று வசதியாக இல்லை. வாடகை வீடு தான், இரண்டு பேருக்கும் இரண்டு மோட்டார் பைக்குகள் இருக்கின்றன.

நான்கு நாட்கள் கழித்து பஸ்ஸில் போய் இறங்கினேன், எப்போதும் போல் எனக்கு முன்வந்து காத்திருந்தாள்! எனது கடைசி மருமகள் ஓடி வந்து பையை வாங்கி "ஸ்கூட்டரில் பத்திரமாக உட்கார வைத்துக்கொண்டாள், உங்களை ஷேவிங் பண்ண கூட கூட்டிட்டு போக நேரம் இல்லையாமா அவங்களுக்கு, அவ்ளோ பெரிய ஆளுங்களா ஆயிட்டாங்களா என்று சொல்லிக் கொண்டு பேசாம வாங்க என்று ரோஸ்மில்க் கடைக்கு போவதற்குள் சவரக்கடைக்கு போவோம் என அழைத்து சென்றாள். கண்ணாடி என்ன ஆச்சி என்று முறைத்தாள்.தயங்கி தயங்கி ஒரு பக்கம் உடைந்த கண்ணாடியை காட்டினேன். கோபத்தை வெளிக்காட்டாமல் கண்ணாடி மாற்ற அழைத்து சென்றாள்.

இதுக்கு தான் உங்களை அனுப்ப மாட்டேன்னு சண்டை போடுறது புரியுதாப்பா.என்று முறைத்தாள் என்னிடம் பதிலில்லை! கண்ணாடியை மாற்றிக்கொடுத்தாள், துணியெல்லாம் சுத்தமா துவைச்சிருக்கே நீங்க தானே துவைச்சிங்க பொய் சொல்லாம சொல்லுங்க என்று டீச்சரை போல் முறைக்க என்ன செய்வது என்று தெரியாமல் பாதி பற்களோடு சந்தோஷமாய் சிரித்தேன், அவளும் சிரித்துவிட்டாள்.

எனக்கு தேவையான எல்லாவற்றையும் வாங்கி பையை நிரப்பிக்கொண்டு வீட்டுக்கு அழைத்து சென்றாள்.ஸ்கூட்டரில் உட்கார்ந்து செல்லும்போது லேசா மயக்கமா இருக்கு சாஞ்சிக்கட்டுமாம்மா என்று கேட்டேன் கொஞ்சதூரம் தான்பா போயிடலாம் பத்திரமா சாஞ்சிகொங்க என்று சொல்ல மெதுவாக சாய்ந்து கொண்டேன். உண்மையில் எனக்கு மயக்கமெல்லாம் இல்லை. நான் பெறாத மகளின் மீது சாய்ந்துகொள்ள ஆசையாக இருந்தது. அதனால் தான் பொய்சொல்லி சாய்ந்துகொண்டேன்

இன்னும் ஒரு மாதத்திற்கு அவளின் செல்லத் திட்டுகளுக்கு நடுவில் காணாமல் போகும் என் முதுமையின் ஊமைக்காயங்கள்! ஏதோ ஒரு ரூபத்தில் தெய்வம்.

# தீவிரமடையும் கனடா-இந்

- ❖ கனடாவுக்கு ஆதரவுக்கரம் நீட்ட
- ❖ கனடா பிரஜைகளுக்கான விசா

(டில்லி)

**சீக்கிய மதத்தலைவர் கொலையில் கனடா பிரத குற்றம்சாட்டியுள்ள நிலையில், அதன் நெருங்கிய நட்பு ந நியூசிலாந்து ஆகியவை கனடாவுக்கு ஆதரவு அளிக்க பிரஜைகளுக்கான விசா சேவையை இந்தியா தற்காலிக**

அத்துடன் கனடா உள்ளிட்ட குறித்த 5 நாடுகளும் பைவ் ஐ அலையன்ஸ் என்ற பெயரில் உளவுத் தகவல்களைத் தங்களுக்குள் பகிர்ந்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கனடா - இந்தியா இடையிலான மோதல் போக்கை ஏனைய நாடுகள் விரும்பவில்லை எனவும் கனடா பிரதமர் இந்தியா மீது பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ள நிலையிலும் குறித்த விடயத்தில் முழுமையாக விசாரணை நடத்த வேண்டும் என அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்புடன் தொடர்புடையவர்களும் கனடாவில் தஞ்சமடைந்துள்ளதாகவும், இவர்களினால் உலகின் பல நாடுகளுக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் முன்னதாக இந்தியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

கனடாவில் சீக்கிய தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் இந்திய அரசாங்கத்




# மனித மூளையில் சிப் பொருத்தி ஆய்வு எலன்மஸ்கின் நிறுவனத்திற்கு அனுமதி



(வோஷிங்டன்)

உலக பணக்காரரான எலான் மக்ஸ் வித்தியாசமான முயற்சிகளுக்கு சொந்தக்காரர்.

மூளையில் சிப் பொருத்தும் முயற்சிகளு க்காக இவர் கடந்த 2016 ஆம் ஆண்டு நியூராலிங் என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார்.

மனித எண்ணாங் களை செயற்படுத்தும் வகையில் மூளைக்கும் கணினிக்கும் இடையே இணைப்பை உருவாக்க சிப் ஒன்றை உருவாக்கியுள்ளது.

இச்சோதனைக்கு அமெரிக்க அரசிடம் பலமுறை விண்ணப்பித்து இருந்தது.

ஆனால் அவைகள் இரத்து செய்யப்பட்ட நிலையில் தற்போது அனுமதி வழங்கியுள்ளது.

நரம்பியல் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களும், பக்கவாதம், ப்ார்வை குறைபாடு உள்ளவர்களும் ஸ்மார்ட் போன் கணினி போன்ற ஸ்மார்ட் டிவைஸ்களை எளிதாக பயன்படுத்தும் நோக்கத்துடன் அவர்களது மூளையில் மைக்ரோ சிப்பை பொருத்தும் ஆராய்ச்சியில் ஈடுபடவுள்ளது.

மனித மூளையில் சிப்களை பொருத்தி சோதனை செய்ய பக்கவாத நோயாளிகள் தாமாக முன்வந்து விண்ணப்பிக்க முடியும் என எலன் மஸ்கின் நிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்நிலையில், நினைவாற்றல் தொர்டர்பான நோய்கள் உள்ளவர்கள் மூளையின் செயற்பாட்டை மீட்டெடுக்கவும் கண் பார்வை, பக்கவாதம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் இந்த புதிய தொழில்நுட்பம் பயன்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதில் பல கட்ட சோதனையில் குரங்குகளின் மூளையில் "சிப்"பை பொருத்தி நடத்தப்பட்ட பரிசோதனை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டன. (5)

சூ
10



(பீ
சீன
மாக
னர்,
சூறா
கிலோ
அந்த
அ
அதிக

உ

(ு
உ
மிப்
நாடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## இந்தியா மோதல் போக்கு

### ...ட்ட தயங்கும் மேற்கத்தேய நாடுகள்
### ...சா சேவையை நிறுத்திய இந்தியா

**...ிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்தியா மீது நேரடியாக ...ப்பு நாடுகளான அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரிட்டன், ...ிக்கத் தயக்கம் காட்டி வருகின்றன. அதேநேரம் கனடா ...லிகமாக நிறுத்தி வைத்துள்ளது.**




...திற்கு சம்பந்தம் இருப்பதாக கனடா அரசு பகிரங்கமாக குற்றம் சாட்டியது.

இதற்கு இந்திய அரசாங்கம் கடுமையான எதிர்ப்பு தெரிவித்ததுடன், சமீபத்தில் கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தி கனடாவுக்கு செல்லும் இந்தியர்கள் மற்றும் அங்கு வாழும் இந்தியர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்குமாறு இந்தியா தெரிவித்தது.

ஆனால் இந்தியாவின் இந்த குற்றச்சாட்டிற்கு மறுப்பு தெரிவித்த கனடா பொது பாதுகாப்பு அமைச்சர், கனடா ஒரு பாதுகாப்பான நாடு என்று தெரிவித்தார்.

இந்நிலையில், கனேடிய நாட்டு மக்களுக்கான விசா சேவையை இந்தியா தற்காலிகமாக அடுத்த அறிவிப்பு வரும் வரை நிறுத்தி வைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருநாடுகளுக்கு இடையே ராஜங்க மோதல் அதிகரித்து வரும் நிலையில் செயற்பாட்டு காரணங்களுக்காக விசா சேவையானது நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது. (நி-5)

## கனடாவிலுள்ள இந்திய பிரஜைகளுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை



(ஒட்டாவா)

கனடாவில் அதிகரித்து வரும் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு அங்குள்ள அனைத்து இந்திய நாட்டவர்கள் மற்றும் மாணவர்களை மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு இந்திய வெளியுறவு அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

சமீபத்திய இந்திய தூதுவர் ஒருவரை வெளியேற்றியமை தொடர்பாக எழுந்துள்ள கருத்து வேறுபாட்டிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கனடாவில் உள்ள இந்தியப் பிரஜைகள் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த மாணவர்கள் ஒட்டாவாவில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் அல்லது டொராண்டோ மற்றும் வான்கூவரில் உள்ள இந்திய துணைத் தூதரகங்களில் அந்தந்த இணையதளங்கள் madad.gov.in மூலம் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

ஏதேனும் அவசரநிலை அல்லது விரும்பத்தகாத சம்பவங்கள் ஏற்பட்டால், உயர் ஸ்தானிகராலயம் மற்றும் துணைத் தூதரகங்கள் கனடாவில் உள்ள இந்திய குடிமக்களுடன் தொடர்பு கொள்ள உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் பாதுகாப்புச் சூழல் மோசமடைந்து வருவதால், குறிப்பாக இந்திய மாணவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடனும் விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். (நி-5)

## ...சூறாவளியில் சிக்குண்டு ...10 பேர் பரிதாபமாக உயிரிழப்பு




(பீஜிங்)

சீனாவில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக 10 பேர் வரை உயிரிழந்துள்ளனர். சீனாவின் சியாங்சு மாகாணத்தில் சூறாவளி மணித்தியாலத்திற்கு 200 கிலோமீற்றர் வேகத்தில் வீசி வருவதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், சூறாவளியால் 200 இற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இடிபாடுகளுக்கு உள்ளான கட்டடங்களுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டு வருகின்ற நிலையில், உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

## பரபரப்பான விமான நிலையமாக துபாய் சர்வதேச விமான நிலையம்

(அபுதாபி)

துபாய் சர்வதேச விமான நிலையமானது ஆசிய - பசுபிக் மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் மிகவும் பரபரப்பான மற்றும் சிறந்த சேவையை வழங்கும் விமான நிலையமாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச விமான நிலைய கவுன்சில் ஆசியா - பசுபிக் மற்றும் மத்திய கிழக்கு வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின் படி துபாய் விமான நிலையம் பிராந்தியத்தில் உள்ள மற்றைய விமான நிலையங்களை விடவும் சிறந்த சேவையை வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.




அதன்படி, துபாய் விமான நிலையமானது இவ்வாண்டின் முதல் பாதியில் 41.6 மில்லியன் பயணிகளையும் 201800 விமானங்களையும் கையாண்டுள்ளதாக பதிவாகியுள்ளது.

இதனை கடந்த 2019 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 13 வீதம் அதிகமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

துபாய் விமான நிலையமானது 104 நாடுகளில் 255 இற்கும் மேற்பட்ட இடங்களுக்கும் 90 இற்கும் மேற்பட்ட சர்வதேச விமான நிறுவனங்களுக்கும் சேவையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## உலக நாடுகள் உக்ரைனுக்கு பக்கபலமாக நிற்க வேண்டும்

### அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன்

(நியூயோர்க்)

உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பிற்கு எதிரான போரில் உலக நாடுகள் உக்ரைனுக்கு பக்கபலமாக நிற்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் கூட்டத் தொடரில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் மோதலின் போது மனிதாபிமான உதவிகளை ஒழுங்கமைப்பதில் ஐ.நா தலைமை வகித்தாலும் அது போரில் மத்தியஸ்தராக செயற்படவில்லை என்றும் இப்போது நாம் எடுக்கும் முடிவுகள் பல தசாப்தங்களாக நமது எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகிறது என்றும் தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி செயலக பெயர்ப்பலகையை வாகனங்களில் காட்சிப்படுத்த வேண்டாம்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலக பெயர்ப் பலகையை வாகனங்களில் காட் சிப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி செயலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் சார்திகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பதில் ஜனாதிபதி செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பெயர்ப்பலகைகளை காட்சிப்படுத்தும் எந்தவொரு வாகனமும் ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்புடையவை அல்ல எனவும், அவை பொதுமக்களை ஏமாற்றும் போலியான முயற்சி எனவும் பதில் ஜனாதிபதி செயலாளர் மேலும் குறிப்பிட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (நி-6)

# தங்க பிஸ்கட்டுகளுடன் வர்த்தகர் கைது

(கொழும்பு)

சுமார் ஒரு கோடியே முப்பது இலட்சம் ரூபா பெறுமதியான ஐந்தரை தங்க பிஸ்கட்டிகளை சட்டவிரோதமாக கொண் டுவந்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றுக் காலை பொலிஸ்போதைப்பொருள் ஒழிப்பு திணைக்கள அதிகாரிகள் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் காலி பிரதேசத்தில் வசிக்கும் 52 வயதான வர்த்தகராவார். டுபாயிலிருந்து SL-226 என்ற ஶ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

விமான நிலையத்தில் அனைத்து சோதனைகளையும் முடித்துக்கொண்டு அவர் விமான நிலையத்திலிருந்து வெளியே செல்லும்போது, பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழு அவரது பயணப்பையில் இந்த தங்க பிஸ்கட்டுகளை கண்டுபிடித்து அவரைக் கைது செய்தனர்.

பின்னர், இந்த பயணி மற்றும் அவர் சட்ட விரோதமாக கொண்டு வந்த தங்க பிஸ்கட்டுகள் அனைத்தும் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)




## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகம்

யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தில் இயங்கும் சிற்றுண்டிச்சாலை மற்றும் அலுவலக வாகனங்களுக்கான வாகன சுத்திகரிப்பிற்காக 15.10.2023-14.10.2024 வரையான காலப்பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | விபரம் | சிற்றுண்டிச்சாலை | வாகன சுத்திகரிப்புச்சேவை |
|---|---|---|---|
| 01 | படிவக் கட்டணம் | ரூபா 1,000.00 | ரூபா 500.00 |
| 02 | கேள்வி வைப்பு (மீளளிப்பு) | ரூபா 10,000.00 | ரூபா 10,000.00 |
| 03 | படிவ விநியோகம் | 22.09.2023-02.10.2023 திகதி வரை | 22.09.2023-02.10.2023 திகதி வரை |
| 04 | விண்ணப்பம் ஏற்பு | 03.10-2023 மு.ப 10.00 மணிவரை | 03.10.2023-மு.ப 10.00 வரை |
| 05 | விண்ணப்பம் திறத்தல் | மு.ப 10.00 | மு.ப 10.00 |

விண்ணப்பத்தை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்வதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புக்கு (தொலைபேசி இல- 021 222 2647) (சி-7297)

வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகம்.



## பழைய மாணவர் சங்க யாப்பு நிறைவேற்றத்திற்கான பொதுக்கூட்ட அழைப்பு - 2023-

காலம் :
01.10.2023 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:
முற்பகல் 10.00 மணி
இடம் :
பாடசாலை பிரதான மண்டபம்

அனைத்துப் பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(17173)

தலைவர், செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயம்.


# புரட்டாதி மாத இராசி பலன்கள் 18.09.2023-17.10.2023

## துலாம்

**சாந்த குணத்தோடு பிறருக்கு உதவிசெய்யும் துலாம் இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியைக் குரு பார்க்கிறார். எனவே நினைத்தது நடக்கும். நேச மனப்பான்மை கொண்டவர்கள் பாசத்தோடு பழகுவதோடு பண வரவிற்கும் வழிவகுத்துக் கொடுப்பர். கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். கடல் தாண்டிச் செல்லும் யோகம் கூட ஒரு சிலருக்கு உண்டு. ஜென்மத்தில் கேது இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை மட்டும் அடிக்கடி வந்து அலை மோதும்.

**புதன் வக்கிரம்**

புரட்டாதி 10 ஆம் திகதி, கன்னி இராசியில் புதன் வக்கிரம் பெறுகிறார். கன்னி இராசி புதனுக்கு உச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு விரய ஸ்தானத்திற்கு அதிபதியான புதன் வக்கிரம் பெறுவது நன்மைதான். சுபவிரயங்கள் அதிகரிக்கும். தூர தேசத்திலிருந்து உங்களுக்கு ஆதரவு தருவதாக நண்பர்கள் எடுத்துரைப்பர். தொழிலைப் பொறுத்தவரை புதிய பங்குதாரர்கள் வந்திணைய வாய்ப்பு உண்டு. தொழிலுக்கான கூடுதல் முதலீடுகளைச் செய்ய, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வெறும் விரயமாக மட்டுமல்லாமல் வருமானம் வந்தே உங்களுக்கு செலவு ஏற்படும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**துலாம் - செவ்வாய்**

புரட்டாசி 17 ஆம் திகதி, துலாம் இராசிக்கு செவ்வாய் வருகிறார். உங்கள் இராசிக்கு 2, 7 இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். தனாதிபதி செவ்வாய் தங்கள் இராசியில் சஞ்சரிக்கும் இந்தநேரம் பணப்புழக்கம் அதிகரிக்கும். பாராட்டும் புகழும் கூடும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். இடம் வாங்குவது, வீடு வாங்குவது போன்ற வற்றில் கவனம் செலுத்துவீர்கள். எதிரிகளின் தொல்லை குறையும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். வள மான எதிர்காலத்திற்கு வழிகூறும் விதத் தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும்.

**துலாம் - புதன்**

புரட்டாதி 28ஆம் திகதி துலாம் இராசிக்குப் புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது கொஞ்சம் கவனமாக இருப்பது நல்லது. எதிர்பாராத விரயம் உண்டு. இடமாற்றம், ஊர் மாற்றம் ஒரு சிலருக்கு ஏற்படும். பெற்றோரின் உறவில் விரிசல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும். வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற்படும். தைரியத்தையும் தன்னம்பிக்கையயும் தக்க வைத்துக் கொள்வது நல்லது.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும். வியாபாரம் வெற்றிநடை போடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திறமைக்கு ஏற்ப அங்கீகாரம் கிடைக்கும். கலைஞர்களுக்கு வருமானம் திருப்தி தரும். மாணவ-மாணவிகள் படிக்கும் நேரத்தை அதிகப்படுத்தினால் மதிப்பெண் கூடுதலாகக் கிடைக்கும். பெண்களுக்கு பொருளாதாரம் திருப்தி தரும். வாழ்க்கைப் பாதையில் இருந்த குறுக்கீடு அகலும். தடைப்பட்ட சுபகாரியங்கள் தானாக கைகூடி வரும்.

## விருச்சிகம்

**வெற்றி ஒன்றே குறிக்கோளாக செயற்படும் விருச்சிக இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு தொழில் ஸ்தானாதிபதி சூரியனும் இணைந்து சஞ்சரிக்கிறார்.

எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். வருமானம் உயர்ந்து வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். தர்ம காரியங்களுக்கு கொடுத்து உதவுவீர்கள். சகாய ஸ்தானத்தில் சனி இருப்பதால் இம்மாதம் உங்கள் எண்ணங்கள் எல்லாம் ஈடேறும்.

**புதன் வக்கிரம்**

புரட்டாதி 10 ஆம் திகதி, கன்னி இராசியில் புதன் வக்கிரம் பெறுகிறார். அஷ்டமாதிபதியாகவும் புதன் விளங்குவதால் அவர் வக்கிரம் பெறுவது நன்மைதான். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். சென்ற மாதத்தில் நடைபெறாதிருந்த சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும்.

தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட இடத்திற்கு மாறுதல் உண்டு. உயர் அதிகாரிகள் உங்கள் எண்ணங்களை நிறைவேற்றுவர். வெளிநாட்டு முயற்சியில் அனுகூலம் கிடைக்கும். ஒரு தொகை செலவழிந்த பின்னரே மற்றொரு தொகை கரங்களில் புரளும்.

**துலாம் - செவ்வாய்**

புரட்டாசி 17 ஆம் திகதி, துலாம் இராசிக்கு செவ்வாய் வருகிறார். உங்கள் இராசிக்கு அதிபதியான செவ்வாய் 6 ஆம் இடத்திற்கும் அதிபதியானவர். 6 ஆம் இடத்திற்கு அதிபதியான செவ்வாய் 12 ஆம் இடத்திற்கு வரும் பொழுது, எதிர் பாராத நல்ல திருப்பங்களை உருவாக்குவார். வாகன யோகம் முதல் அனைத்து யோகங்களும் வந்து சேரும். தேகநலன் சீராகும். செல்வநிலை உயரும். குருவின் பார்வை செவ்வாயின் மீது பதிவதால் "குரு மங்கல யோகம்" ஏற்படுகின்றது.

**துலாம் - புதன்**

புரட்டாதி 28 ஆம் திகதி, துலாம் இராசிக்குப் புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். 8 இற்கு அதிபதி 12 இல் வரும் இந்த நேரம் எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். இடமாற்றம், வீடுமாற்றம் இனிமை தரும். பழைய பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள். நீண்ட நாட்களாக வரவேண்டிய பதவி உயர்வுகள் இப்பொழுது தானாக வரலாம். மேலும் வெளிநாட்டில் உள்ள உறவினர்கள் மூலம் ஆச்சரியப்படும் தகவலும் கிடைக்கும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்குப் புதிய பொறுப்புகள் கிடைத்து மகிழ்ச்சி காண்பர். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு கூடுதல் லாபம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவும் கேட்ட சலுகைகளும் கிடைக்கும். கலைஞர்களுக்கு சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும்.

மாணவ-மாணவியர்களுக்கு போட்டிகளில் வெற்றி கிடைக்கும். பெண்களுக்கு குடும்ப ஒற்றுமை பலப்படும். சுபகாரியப் பேச்சுகள் முடிவிற்கு வரும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதிச் செலவிடும் சூழ்நிலை உண்டு. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் இரா.ஜெயக்குமார் எழுதிய இன்னும் எத்தனை காலமோ? எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு உரும்பிராய் கற்பக விநாயகர் மணி மண்டபத்தில் உரும்பிராய் ஞானவைரவர் சனசமூக நிலைய உப தலைவர் சிவஸ்ரீ.ந.பிரபுதேவ குருக்கள் தலைமையில் இடம் பெற வுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து ராதா கிருஸ்ணன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)

# இலவச வைத்திய சேவையை முடக்காதே!

## யாழில் வைத்தியர்கள் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள ஆதார வைத்தியசாலைகள் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் வைத்தியர்கள், சுகாதார பணியாளர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் புத்திஜீவிகள் வெளியேறுவதை தடுப்பதிலும், அத்தியாவசிய மருந்து பொருட்களுக்கு உள்ள தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதிலும்,

தரமான மருந்துகள் அரச வைத்தியசாலைகளில் இருப்பதை உறுதிப்படுத்துவதிலும் அரசாங்கத்தின் மெத்தன போக்கை கண்டித்து குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று வியாழக்கிழமை மதியம் 12 மணி முதல் 1 மணி வரையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (நி-6-33-30)

## மஹோற்சவம்

(கரணவாய்)

நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம் பெறும்.

எதிர்வரும்29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாம்பு திருவிழாவும், 30ஆம் திகதி சனிக்கிழமை கப்பல் திருவிழாவும் ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 2ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 3ஆம் திகதி சமுத்திர தீர்த்தமும், 4 ஆம் திகதி பட்டுத் தீர்த்தமும் இடம் பெறும். (நி-6-60)

### ரைகொண்டோ போட்டியில்

# தேசிய ரீதியில் இரண்டாம் இடம் பிடித்த மடு கல்வி வலய மாணவி



கொழும்பில் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் தேசிய ரீதியில் இரண்டாம் இடம் பிடித்து வரலாற்று சாதனை படைத்துள்ளார் மடு கல்வி வலய மாணவி லக்சாயினி.

ரைகொண்டோ போட்டியில் முதன் முதலாக பங்கு பற்றி மன்னார் மடு கல்வி வலயத்திற்கு உட்பட்ட மன்/ பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலயத்தின் மாணவியே குறித்த சாதனையை படைத்துள்ளார். மேலும் குறித்த பாடசாலை வரலாற்றில் நீண்ட காலத்தின் பின் தேசிய மட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கிகொண்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-285)

## திலீபனின் ஆவணக் காட்சியகம் நல்லூரில் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் வரலாற்றினை எடுத்தியம்பும் ஆவணக் காட்சியகம் இன்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பார்த்திபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!! என்னும் தொனிப்பொருளுடன் இன்று மாலை 6 மணிக்கு நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயம் முன்றலில் மாவீரின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (நி-6-33)

## கால போக கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை தெற்கு கமக்கார அமைப்பின் காலபோக கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல்2 மணியளவில் இருபாலை தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என இருபாலை தெற்கு கமக்கார அமைப்பின் செயலாளர் நடேச பிள்ளை கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார். அவ்வேளை கமக்காரர்கள் அனைவரையும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அறிவித்துள்ளார். (நி-6)

# உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் வெளிவாரி பணியாளர்களுக்கு நியமனம் வழங்குமாறு

## சிறீதரன் எம்.பி கோரிக்கை

(தருமபுரம்)

உள்ளூராட்சி மன்றங்களில் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சுகாதாரத் தொழிலாளர்களாகவும், வேலை வெளிக்களத் தொழிலாளர்களாகவும் 180 நாட்களைக் கடந்து தொடர்ச்சியாகக் கடமையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கு மாகாணத்தில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் தொடர் சேவையில் ஈடுபட்டு வரும் 406 வெளிவாரிப் பணியாளர்கள் இந் நியமனத்திற்குள் உள்ளீர்க்கப்படாததால் மிக மோசமான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயமாக வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் அவரால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 406 வெளிவாரித் தொழிலாளர்களது விபரப்பட்டியல் உள்ளடங்கலாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு தனித்தனியே அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கடிதங்களில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

உள்ளூராட்சி மன்றங்களின் சேவைப்பரப்பினுள் அடங்கும் திண்ம, திரவக் கழிவகற்றல், பொதுச் சந்தைகள் மற்றும் குத்தகை நிலையங்களின் மேற்பார்வை, வரி அறவீடு, காவற்கடமை உள்ளிட்ட பணிகளை நிறைவேற்றி வந்த இத்தொழிலாளர்கள என்றோ ஒரு நாள் தமக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே நீண்ட காலம் தொடர்ச்சியாக கடமையாற்றி வருகின்றனர்.

தினவரவுப் பதிவு, மாத வேதனம், விடுமுறை உள்ளிட்ட சலுகைகள், உரிமைகள் அனைத்தும் அந்தந்த உள்ளூராட்சி மன்றத்தினாலேயே நிர்வகிக்கப்படுகின்ற போதும்



வெளிவாரி அடிப்படையில் கடமையாற்றும் இவ் ஊழியர்களை நிரந்தர நியமனத்தில் உள்ளீர்ப்பதில் நிர்வாக இடர்பாடுகள் இருப்பதாகக்கூறி அவர்களது நிரந்தர நியமனம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களில் நிலவும் அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளுக்கு நியமனம் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ், வெளிவாரி அடிப்படையிலான ஒப்பந்தப் பணியாளர்களாக வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் 406 தொழிலாளர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க ஆவண செய்ய வேண்டும் என ஜனாதிபதி பிரதமர் மற்றும் வடமாகாண ஆளுநர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-6-316)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 450 | 450 |
| தக்காளி | 160 | 160 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 150 | 180 | 200 |
| கோவா | 160 | 140 | 160 | 150 |
| கரட் | 300 | 300 | 260 | 300 |
| பூசணி | 60 | 80 | 80 | 80 |
| புடோல் | 80 | 80 | 100 | 150 |
| வாழைக்காய் | 200 | 160 | 180 | 200 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 400 | 350 | 400 |
| வெண்டக்காய் | 100 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 150 | 160 |
| பயற்றங்காய் | 100 | 180 | 150 | 200 |
| லீக்ஸ் | 160 | 150 | 160 | 160 |
| பீற்றூட் | 140 | 120 | 160 | 160 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 | 320 |
| முருங்கைக்காய் | 200 | 140 | 100 | 100 |
| போஞ்சி | 420 | 450 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 160 | 160 |
| கீரை – 1 பிடி | 60 | 50 | 50 | 100 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 1000 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 420 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 300 | — | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | — | 160 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 60 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 120 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 289





மூன்றாவது முறை கடல் அலை அவ்வனை மேலே கொண்டு வந்தபோது படகு முன்னைவிடத் தூரத்துக்குப் போய்விட்டதாகத் தோன்றியது. 'அவ்வளவு தான் கடலில் முழுகிச் சாகப் போகிறோம்' என்ற எண்ணம் அவன் மனத்தில் உண்டாகிவிட்டது! நாம் முழுகுவது மட்டுமில்லை நம்முடைய அரைக்கச்சும் அதில் உள்ள ஓலையும் முழுகப் போகின்றன! குந்தவை தேவியின் முகம் அவன் மனக் கண்ணின் முன்னால் வந்தது.

"இப்படி செய்து விட்டாயே?" என்று கேட்பது போல் இருந்தது.

"ஆகா! என்னவெல்லாம் கனவு கண்டோம்? என்னவெல்லாம் மனக் கோட்டை கட்டினோம்? வாணர் குலத்துப் பழைய அரசு திரும்ப வந்து, இரத்தின சகிதமான சிங்காதனத்தில் பக்கத்தில் இளைய பிராட்டியுடன் வீற்றிருக்கப் போவதாக எண்ணினோமே? அவ்வளவும் பாழாகிவிட்டது! இந்தப் பாவிப் பெண் கெடுத்துவிட்டாள்! இவள் ஒரு பெண் அல்ல பெண் உருக்கொண்ட பேய்! பழுவேட்டரையர்களைச் சேர்ந்தவள். இல்லை, அந்த மோகினிப்பிசாசு நந்தினியைச் சேர்ந்தவள். நாம் கடலில் முழுகிச் செத்தாலும் பாதகமில்லை. இந்தப் பெண் பேய் மட்டும் இப்போது நம்மிடம் சிக்கினால் இவள் கழுத்தை நெறித்து. சீச்சீ! இது என்ன எண்ணம்! சாகும் போது நல்ல விடயமாக எண்ணிக் கொள்வோம்! கடவுளை நினைப்போம்! உமாபதி! பரமேசுவரா! பழனி ஆண்டவா! பாற்கடலில் பள்ளி கொண்ட பெருமாளே! குந்தவை தேவி! மன்னிக்கவும். ஒப்புக்கொண்ட காரியத்தை முடிக்காமல் போகிறேன். அதோ படகு தெரிகிறது. அந்தப் பெண் மட்டும் இப்போது கையில் சிக்கினால்!'

வந்தியத்தேவன் கடலில் குதித்துச் சிறிது நேரம் வரையில் பூங்குழலி அலட்சியமாகவே இருந்தாள். தட்டுத் தடுமாறி நீந்தி வந்து படகில் தொத்திக் கொள்வான் என்று நினைத்தாள். 'கொஞ்சம் திண்டாடட்டும்' என்ற எண்ணத்துடனே படகுக்கும் அவனுக்கும் இருந்த தூரத்தை அதிகமாக்கினாள். விரைவில் அவள் எண்ணியது தவறு என்று தெரிந்து விட்டது.

'இவனுக்கு நன்றாக நீந்தத் தெரியவில்லை அதோடு பீதியும் அடைந்து விட்டான் 'ஆ!,' 'ஓ!' என்று அவன் அலறுவது விளையாட்டுக்கு அன்று உண்மையான பயத்தினாலேதான்.

இன்னும் சற்றுப் போனால் உப்புத்தண்ணீரைக் குடிக்கத் தொடங்கி விடுவான்! முழுகியும் போய் விடுவான். பிறகு அவனுடைய உடலைக் கண்டுபிடிக்கவும் முடியாது. சேச்சே! தவறு அல்லவா செய்து விட்டோம்? விளையாட்டு விபரீதமாக முடிந்துவிடும் போலிருக்கிறதே! அக்கரை போகும் வரையில் நாம் வாயை மூடிக் கொண்டிருந்திருக்க வேண்டும். அவனுடைய இரகசியம் நமக்குத் தெரியும் என்று காட்டிக் கொண்டிருக்கக் கூடாது. அதற்குள்ளே அவசரப்பட்டு விட்டோம். ஆனாலும் இந்த முரடன் இப்படிச் செய்வான் என்று யாருக்குத் தெரியும்? தண்ணீரைக் கண்டு இவன் இப்படி பயப்படுவான் என்று யார் கண்டது?'

அலையின் உச்சியில் வந்தியத்தேவன் அடுத்த தடவை தெரிந்த போது, பூங்குழலி படகை அவனை நோக்கிச் செலுத்தினாள்.

ஒரு நொடிப் பொழுதில் படகு அவனுக் கருகில் நெருங்கி விட்டது. "வா! வா! வந்து ஏறிக் கொள்!" என்றாள். ஆனால் அவன் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. விழுந்தாலும் படகைப் பிடித்து ஏறிக்கொள்ளப் போகிறவனாகத் தெரியவில்லை. கேட்கும் சக்தியோடும் பார்க்கும் சக்தியையும் இழந்துவிட்டதாகத் தோன்றியது. ஆனால் அலறும் சக்தி மட்டும் இருந்தது. ஒரு கையை மேலே தூக்கி, தலையை மேலாக நிமிர்த்தி, 'ஓ' என்று ஒரு கணம் அலறினான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வாக்குறுதி மீறிய மேயர்

ஒருகாலத்துல ஜேர்மன் நாட்டில் ஹாம்லின் அப்படினு ஒரு நகரம் இருந்தது. இப்பவும் அப்படி ஒரு நகரம் இருக்கு. நீங்க படிக்கப்போற கதையை இப்போவும் அங்க ஒவ்வொரு வாரமும் தெருக்களில் நாடகமா நடிச்சு காட்றாங்களாம். அட கதையை சொல்ல மறந்துட்டேன். இந்த நகரத்தோட பழைமையான காலம் அது. அங்க ஒரு மேயர் இருந்தார்.

அவரோட ஆட்சியில் அந்த நகரம் நன்றாக செழிப்பாக இருந்தது. திடீரென்று ஒரு நாள் அந்த நகரத்துல நிறைய எலிகள் புகுந்து விட்டன. எங்க பாத்தாலும் எலி. நடக்குற இடம் , கடைகள், வீடு என ஒரு இடம் விட்டு வைக்கல அந்த எலிகள். நம்ம வீட்ல



ரெண்டு எலி கண்ணில பட்டாலே தொல்லை தாங்க முடியாது. வைக்கிற பொருட்களை எல்லாம் நாசம் பண்ண ஆரம்பிச்சிடும். இந்த நகரத்துல ரெண்டு இல்ல திரும்புற திசையெல்லாம் எலிகள்.

மக்கள் எல்லோருக்கும் ரொம்ப கவலையாக இருந்தது. என்ன பண்றதுனே தெரியல, அடிச்சி, துரத்தி [illegible] தாங்க. பூனை [illegible] வளர்த்து பாத்தாங்க. ஒன்னும் வேலைக்கு ஆகல. சரி இதுக்கு மேல இந்த எலிகளை ஒன்னும் பண்ண முடியாதுனு முடிவு பண்ணி மேயர் கிட்ட நகரவாசிகள் கிளம்பினாங்க. கூடமா எல்லோரும் நின்னு மேயர கூப்பிட ஆரம்பிச்சாங்க. இவங்க எதுக்கு வந்துருக்காங்கனு மேயருக்கு [illegible] இல்லையா.

மேயர்" யாரும் பயப்படாதீங்க , கண்டிப்பா இதுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் அது வர பொறுமையா இருங்க" என்று சொன்னார். மக்கள்" இதுக்குமேல முடியாது மேயர் அவர்களே, குழந்தைக்கு வைக்கிற சாப்பாட கூட விட்டு வைக்க மாட்டேங்குது இந்த எலிகள். நம்ம அசந்து தூங்கின நம்மள கடிச்சி தின்னுவிடுமோனு பயமா இருக்கு" என்றனர். "பெரிய நகரத்தில இருந்து இன்னும்பூனைகளை கொண்டு வர சொல்லிருகேன் , நீங்க அமைதியா போங்க" என்றார் மேயர். மக்களும் புலம்பிக் கொண்டே கலைந்து சென்றனர்.

நகரத்தில் திடீரென ஒரு இசை மக்களின் காதுகளில் ஒலித்தது. மக்களும் வெளியில் வந்து பார்த்தார்கள். ஒருவன் புல்லாங்குழலை வைத்து இசைத்து கொண்டே நடந்தான். அவன் பார்ப்பதற்கு விசித்திரமாக இருந்தான். அவன் மேயர் மாளிகைக்கு நடந்தான். காவலாளி இடைமறித்தான்," நில் எங்கு செல்கிறாய்" என்றான். அந்த விசித்திர மனிதனோ இசைப்பதை நிறுத்திவிட்டு, மேயரை பார்க்க வந்துளேன் என்றான். காவலாளி," அப்படியெல்லாம் உன்னை உள்ளே அனுப்ப முடியாது, உன்னை பார்த்தால் விசித்திரமாக இருக்கிறாய், உன் தோற்றம் ஒரு கிருக்கனை போல் உள்ளது" என்றான். விசித்திர மனிதன் சொன்னான், தோற்றத்தை வைத்து எடை போட்டால் உங்கள் பிரச்சினை முடிவுக்கு வராது, என்றான். என்ன உளறுகிறாய் என்றான் காவலாளி. ஆமாம் , உங்கள் நகரில் இருக்கும் எலிகளை விரட்டவே நான் வந்தேன் என்றான் விசித்திர மனிதன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் இரவுகளின் வணக்கத்தைவிட ஒரு மணி நேரம் அறிவுரை புகட்டுவது மேலானது.

– நபிகள் பிரான்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பௌத்த தேரர்கள் கட்டுப்பாட்டை இழந்துவிட்டார்களா?

கௌதம புத்தபிரான் தூய்மையான துறவைப் பின்பற்றியவர். தூய்மையான துறவைப் பின்பற்ற வேண்டுமாயின், பற்றற்ற இறைவனைப் பற்றிக் கொள்ள வேண்டும்.

பற்றற்றவனாகிய இறைவனைப் பற்றிக் கொண்டால் மட்டுமே தூய்மையான துறவு சாத்தியமாகும்.

அதனையே கௌதம புத்தபிரான் மேற்கொண்டார். அதனால் அவர் பரிநிர்வாணமடைந்தார்.

அதேநேரம் புத்தபிரானின் போதனைகள் இந்த உலகில் அன்பை விதைப்பதாக அமைந்தது.

அதாவது எந்த உயிர்க்கும் தீங்கு செய்யாமல் எந்தப் பொருள் மீதும் பற்று வைக்காமல் வாழும்போது, கள்ளப் புலன் ஐந்தும் அடங்கிப் போகும்.

புலன் ஐந்தும் அடங்கும் கால் அன்பு எனும் ஊற்று பெருக்கெடுக்கும்.

அன்பு எனும் உற்று பெருக்கெடுத்தால் அதுதான் தெய்வீகம். இதனைக் கௌதம புத்தபிரான் தன் மூலம் உலகுக்கு எடுத்து இயம்பினார்.

பற்றற்ற வாழ்வின் மூலம் பரிநிர்வாணமடைந்த கௌதம புத்தபிரானின் போதனைகள் தத்துவார்த்தமானவை.

ஆகையால்தான் பௌத்தம் ஒரு சமயமன்று. அது ஒரு தத்துவம் என்று விளக்கம் தரப்பட்டது.

ஆக, கௌதம புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றுகின்ற உண்மையான பௌத்தர்கள்; எவ்வுயிர்க்கும் தீங்கு எண்ணார்கள். எந்த உயிரையும் கொல்லமாட்டார்கள். எந்தப் பொருள் மீதும் ஆசைப்படமாட்டார்கள். பஞ்சமா பாதகங்களை அவர்கள் செய்யமாட்டார்கள்.

இஃது உண்மையான பௌத்த தத்துவத்தைப் பின்பற்றும் மக்களின் இயல்பு எனில், கௌதம புத்தபிரானின் போதனைகளை தாமும் பின்பற்றுவதற்கு முடிவு செய்த பௌத்த துறவிகள் என்போர், புத்தபிரானுக்கு மிகவும் நெருக்கமானவர்கள்.

அவர்களிடம் அன்பு, அகிம்சை, சாந்தம் எனும் தெய்வீகக் குணங்களைத் தவிர வேறு எதனையும் நாம் காண முடியாது.

இவர்களே பௌத்த பிக்குகள் ஆவர். அவர்கள் பற்றற்ற துறவு வாழ்வை விரும்பி ஏற்றவர்கள் என்பதால், அவர்கள் அணிகின்ற காவி உடை என்பது இறந்தவர்களின் உடல் மேல் அவர் தம் உறவுகளால் சாத்தப்படுகின்ற ஒரு முழத்துக் காவித் துண்டுகளை மயானத்தில் இருந்து எடுத்து அதனைத் மூட்டி (பொருத்தி) அணிந்து கொள்கின்ற அளவில் அவர்களின் துறவு தூய்மையாக இருக்கும்.

இதனை நாம் கூறும்போது, என்ன கதை அளக்கிறீர்கள் என்று நீங்கள் நிச்சயம் கேட்பீர்கள்.

ஏனெனில் நடைமுறையில் பௌத்தர்களும் பௌத்த துறவிகளும் எவ்வாறாக நடந்து கொள்கின்றனர் என்பதை நாம் யதார்த்தத்தில் கண்டுள்ளோம்.

ஆம், பௌத்த துறவிகளில் ஒரு சிலரைத் தவிர, ஏனையவர்கள் எத்துணை கர்வத்துடன், ஆணவச் செருக்குடன் நடந்து கொள்கின்றனர். அவர்களிடம் புத்தபிரானின் போதனைகள் எதுவும் தெரிவதில்லை.

இதுதவிர கணிசமான பௌத்த பிக்குகள் யாருக்குமே கட்டுப்படாதவர்களாக செயற்படுகின்றனர். இத்தகையவர்களால் இலங்கை மண்ணில் இரத்த ஆறு ஓடவே செய்யும்.

# நாட்டை வங்குரோத்துக்குள்ளாக்கியவர்கள் ஐ.நா கூட்ட தொடருக்கு சென்றுள்ளனர்

## பாராளுமன்றில் சஜித்

(கொழும்பு)

நாட்டை வங்குரோத்தடையச் செய்ய உறுதுணையாக இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபை கூட்டத் தொடருக்கு அழைத்துச் செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது பொது மக்களின் பணத்தை வீணடிக்கும் செயலாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாடு வங்குரோத்தடைந்துள்ள நிலையில், மக்களின் வாழ்வாதாரம், வியாபார நடவடிக்கைகள் சீரழிந்துள்ள இவ்வேளையில், நாட்டை வங்குரோத்தடையச் செய்ய உறுதுணையாக இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபை கூட்டத் தொடருக்குச் செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜனாதிபதி அந்த மாநாட்டுக்கு செல்லும் போது மிகவும் அவசியமான அதிகாரிகளை கூட்டிச் சென்றால் பரவாயில்லை. ஆனால் நாடு வங்குரோத்தாகுவதற்கு காரணமானவர்களை அழைத்து செல்வது பொதுமக்களின் பணத்தை வீணடிக்கும் செயலாகும். ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு பாய்ந்தவர்களை சந்தோஷப்படுத்துவதற்காகவே அவர்களை அழைத்துச் சென்றுள்ளார்.

நாட்டு மக்கள் அரசாங்கத்திற்கு வரியாக வழங்கும் நிதி இவ்வாறு எவரையும் சந்தோஷப்படுத்துவதற்காக ஏன் பயன்படுத்தப்படுகிறது என கேட்கிறோம் என்றார்.

இதன்போது எழுந்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிக்கையில்,

நாடு வங்குரோத்து அடைந்ததாக இப்போது தெரிவிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தந்தையான ரணசிங்க பிரேமதாச நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்துள்ளார்.

அதன் பின்னர் அமைச்சராக சஜித் பிரேமதாசவும் பல ஆண்டுகாலம் பதவி வகித்துள்ளார். அவர்களும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். அதனை விட்டுவிட்டு எதிர்க்கட்சித் தலைவர் இப்போது பொதுஜன பெரமுன உறுப்பினர்களை குறை கூறுவது எந்த விதத்திலும் ஏற்க முடியாது. அத்துடன் பொது ஜன பெரமுன கட்சி அண்மையில் உருவான கட்சி என்பதையும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சர்வதேச விசாரணைக்கு தயார்

## சபையில் பிள்ளையான்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைக்குத் தயாரென இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்,

உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஆரம்பமான விவாதத்தில் எதிர்க்கட்சி எம்.பி நிரோஷன் பெரேரா தெரிவித்த விடயங்களை மறுதலித்து கருத்து வெளியிட்ட சந்திரகாந்தன் போலியான குற்றச்சாட்டுகளை சுமத்த வேண்டாமெனவும் கேட்டுக்கொண்டார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சனல் - 4 ஆவணப்படம் ஒன்றை வெளியிட்டுள்ள நிலையில் இது தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என பல தரப்பினரால் கோரிக்கை விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### வவுனியாவில் இரட்டைக்கொலை

## ஒருவர் அடையாளம் மூவருக்கு பிடியாணை

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 6 பேரில் ஒருவர் அடையாள அணிவகுப்பின் போது அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், தலைமறைவாகியுள்ள மூவருக்கு வவுனியா நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த ஜீலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் இருவர் மரணமடைந்திருந்தனர்.

குறித்த இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஆறுபேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

கைதுசெய்யப்பட்ட ஆறு சந்தேகநபர்களுக்கான அடையாள அணிவகுப்புக்கு நேற்று திகதியிடப்பட்டிருந்தது.

குறித்த சம்பவத்தில் எரிகாயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த யுவதி நேற்றைய தினம் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பின் போது தாக்குதலில் ஈடுபட்ட ஒருவரை அடையாளம் காட்டியுள்ளார்.

மேலும், மூன்று சந்தேக நபர்களுக்கு எதிரான சாட்சியங்கள் உறுதிப்படுத்தப்பட்டமையால் அவர்களை கைது செய்ய குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் நடவடிக்கைஎடுத்திருந்தனர்.

குறித்த மூவரும் தலைமறைவாகி உள்ளதால் அவர்களை கைது செய்ய பகிரங்க பிடியாணை உத்தரவு வவுனியா நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், வழக்கு விசாரணை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(ம-7,250)

## திருகோணமலையில் திலீபன் ஊர்தி மீது தாக்குதல்

### சந்தேகநபர்களுக்கான மறியல் நீடிப்பு

திருகோணமலை கொழும்பு வீதியினூடாக கடந்த 17ஆம் திகதி திலீபனின் உருவச்சிலையை கொண்டு செல்லும் போது பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட 14 பேர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரு பெண்கள் உட்பட ஆறு பேரையும் கடந்த 18 ஆம் திகதி சீனக்குடா பொலிஸார் கைது செய்து திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இதேநேரம் குறித்த வழக்கு திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதவான் அண்ணாத்துரை தர்ஷினி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அடுத்த மாதம் 5 ம் திகதிவரை குறித்த நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் கட்டளையிட்டார்.(ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை **சனிக்கிழமை காலை 8.30 மணி** [illegible] **மணிவரை வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைகுளம் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, பெரியக [illegible] ஹவுஸ், பல்மெய்ரா ஹவுஸ், தலைமன்னார், தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், வங்காலைப்பாடு சென்ட் லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, Grotto of lady lourds church பேசாலை, கட்டுகார ங்குடியிருப்பு, கரைசல் திட்டம், குருசு பாடு கடற்படை முகாம், படப்பாடி நீர் வழங்கல், பருத்திப்பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரியகரைசல், பேசாலை, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், துள்ளுகு டியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளு குடியிருப்பு திட்டம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரின் இனம் சாரா அரசியல் ஒன்பதாவது குடியரசுத் தலைவராக இலங்கை வம்சாவளித் தமிழர் தர்மன் தெரிவு

05

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.





சிங்கப்பூரின் தந்தை லீ குவான் யூ

லீ குவான் யூ, 5 பெப்ரவரி 2015 அன்று நிமோனியா காரணமாக சிங்கப்பூர் பொதுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். உடல்நிலை மோசமாக உள்ளதாக அரசு அறிவித்தது. 2015 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் திகதி மருத்துவமனையில் மரணமடைந்தார். சிங்கப்பூர் நேரம் ஞாயிறு(23 மார்ச்) அதிகாலை 3.18 மணி அளவில் இறந்தார்.

லீ குவான் யூவின் மறைவை ஒட்டி மார்ச் 23 முதல் மார்ச் 29 வரை ஒரு வாரகாலம் தேசிய அளவில் துக்க வாரமாக சிங்கப்பூர் அரசு கடைபிடிக்கப்பட்டது. லீ குவான் யூவின் குடும்பத்தினர் அவருக்கு மார்ச் 23 மற்றும் 24 ஆகிய நாட்களில் அஞ்சலி செலுத்தினர். பொதுமக்கள் மார்ச் 25 முதல் மார்ச் 28 வரை அஞ்சலி செலுத்தினர். இதில் கிட்டத்தட்ட 4,15,000 பொதுமக்கள் நாடாளுமன்றக் கட்டிடத்திற்கு வந்து நேரடியாக அஞ்சலி செலுத்தினர்.

இது மொத்த மக்கட்தொகையில் 12 விழுக்காடு ஆகும். அரசு முறையிலான இறுதிச் சடங்கு மார்ச் 29 அன்று பிற்பகல் இரண்டு மணிக்குத் தேசிய பல்கலைக்கழக கலாசார மையத்தில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மிகவும் நெருங்கியவர்கள் மட்டுமே பங்குபெறும் வகையில் மண்டாய் தகனச் சாலையில் அவரது உடல் எரியூட்டப்பட்டது. மேலும் நரேந்திர மோடி, அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டன், இந்தோனேசியா அதிபர் ஜோகோ விடோடோ, ஜப்பான் பிரதமர் ஷின்ஸோ அபே, அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அபாட், இங்கிலாந்து நாடாளுமன்ற செயலாளர் வில்லியம் கக் உட்பட 23 நாட்டு தலைவர்கள் லீ இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்.

### சிங்கப்பூர் தனி நாடானபோது, அது நெடுங்காலம் நீடித்திருப்பதற்கான எந்தச் சாத்தியக்கூறும் இல்லை

சிங்கப்பூர் தனி நாடான போது அது நெடுங்காலம் நீடித்திருப்பதற்கான எந்தச் சாத்தியக்கூறும் இல்லை என்று பிரிட்டிஷ் ஊடகங்கள் எழுதின. சிங்கப்பூரில் பிரிட்டிஷார் உருவாக்கியிருக்கும் கட்டமைப்புகளை மூடிவிட்டால், சிங்கப்பூர் என்றொரு நாடே இல்லாமல் போய்விடும் என்று கேலி செய்தன.

ஒரு புறம் பிரிட்டன் இன்னொரு புறம் சீனா, அந்தப் பக்கம் அமெரிக்கா என பல தரப்பில் இருந்தும் சிங்கப்பூரில் ஆதிக்கம் செலுத்துவதற்கு வாய்ப்புகள் உருவாகியிருந்தன. தற்காத்துக் கொள்வதற்கு சிங்கப்பூரிடம் அப்போது ராணுவம் கூடக் கிடையாது. இருந்த இரு படைப்பிரிவுகளும் மலேசியாவிடம் இருந்து இரவலாகப் பெறப்பட்டவை.

இந்த நெருக்கடியைத் திறமையாகக் கையாண்டார் லீ. முதலில் ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புகளிலும் பிற நாடுகளிலும் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார்.

இந்தோனேசியா போன்ற பகை நாடுகளை இணங்கிவரச் செய்தார். இஸ்ரேல் போன்ற நாடுகளிடமிருந்து டாங்குகள், விமானங்கள் போன்றவற்றை வாங்கினார். இதனால் பகை குறைந்தது.

விடுதலையடைந்தபோது வர்த்தகம் முழுவதும் மலேசியாவின் கட்டுப்பாட்டில் இருந்ததால் சிங்கப்பூரின் பொருளாதாரம் பாதாளத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது. வேலை வாய்ப்பில்லாமல் இளைஞர்கள் தவித்துக் கொண்டிருந்தனர்.

### கட்டாய இராணுவப் பணிச் சட்டம்

அப்போது லீ குவான் யூ கட்டாய இராணுவப் பணிச் சட்டத்தைக் கொண்டு வந்தார். ராணுவம் என்றால் யார் சேருவார்கள்? அதனால் ராணுவ வீரர்களுக்கு அதிக சலுகை வழங்க லீ உத்தரவிட்டார்.

அதனால் ஏராளமானோர் இராணுவத்தில் சேர முன்வந்தார்கள். இதனால் ராணுவமும் வலிமையானது. வேலையில்லாத் திண்டாட்டமும் குறைந்தது.

### வீட்டு வசதிக் கழகம் உருவாக்கல்

சிங்கப்பூரின் கட்டமைப்புகளை வலுப்படுத்தும் திட்டங்களை அறிவித்தார். வீட்டு வசதிக் கழகம் அமைக்கப்பட்டு ஆயிரக்கணக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டன. நேர்த்தியான சாலைகள் போடப்பட்டன. சிங்கப்பூர் நவீன நாடாக உருவெடுக்கத் தொடங்கியது. மக்கள் அதற்கேற்றபடி உடனடியாக மாறிவிடவில்லை.

### எச்சில் துப்புவதைத் தடுக்கும் பரப்புரை

நவீன கட்டமைப்புகள் அனைத்தும் அசுத்தம் நிறைந்திருந்தது. அதைத் தடுப்பதற்காக முதலில் கண்ட இடங்களில் எச்சில் துப்புவதைத் தடுக்கும் பரப்புரையை லீ தொடங்கினார். எச்சில் துப்புவதையே மக்கள் மறக்கும் அளவுக்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### காரில் ஒலி எழுப்பினால் அபராதம்

தேவையில்லாமல் காரில் ஒலி எழுப்பினால் அபராதம் விதிக்கப்பட்டது. புகை கக்கும் வாகனங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டன. கால்நடைகளைச் சாலையில் உலவவிட்டால் உரிமையாளருக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

### சூயிங்கத்தை தடை செய்தல்

ஆங்காங்கே ஒட்டப்படுகிறது என்பதால் 1960 களிலேயே சூயிங்கத்தையே தடை செய்ய பரிசீலிக்கப்பட்டது. தபால் பெட்டிகள், சாவித்துவாரங்கள், லிஃப்ட் பொத்தான்கள் என எங்கெங்கும் சூயிங்கத்தை ஒட்டி விடுகிறார்கள் என்று புகார்கள் வந்தன.

மெட்ரோ ரயில்கள் ஓடத் தொடங்கியபோது அதன் கதவுகளில் சூயிங்கம் ஒட்டப்பட்டது. இதனால் 1992 ஆம் ஆண்டு சூயிங்கம் விற்பதற்கு தடை விதிக்கப்பட்டது.

இது குறித்து பிபிசி செய்தியாளர் ஒருவர் லீ குவான் யூவிடம் கேட்டபோது, எதையாவது மென்றால் தான் கற்பனை வரும் என்றால், வாழைப் பழத்தை மெல்லுங்கள் என்று கூறினார்.

இந்தத் தடைக்கு பல தரப்பிலும் எதிர்ப்புக் கிளம்பியது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

1990களின் இறுதியில் சிங்கப்பூரின் வர்த்தக உடன்பாடு செய்து கொண்ட அமெரிக்கா, தனது முக்கிய நிபந்தனையாக சூயிங்கத்துக்கு விதிக்கப்பட்ட தடையை அகற்ற வேண்டும் என்பதை விதித்தது. அதன் பிறகே சூயிங்கம் மீதான தடையை லீ குவான் யூ அகற்றினார்.

1960 களில் இருந்தே தொழில் துறையை மிக வேகமாக வளர்ச்சி பெறச் செய்தார் லீ குவான் யூ. எண்ணற்ற சோதனை முயற்சிகளைச் செய்து பார்த்தார். சில திட்டங்கள் தோல்வியடைந்தாலும், பெரும்பாலான திட்டங்கள் வளர்ச்சிக்குக் கைகொடுத்தன.

### பன்னாட்டு முதலீடுகள்

எண்ணெய்ச் சுத்திகரிப்பு, கணினி தயாரிப்பு, தொலைத் தொடர்பு என முக்கியத் தொழில்கள் சிங்கப்பூரில் பெருகின. பன்னாட்டு முதலீடுகள் குவிந்தன.

பெரு நிறுவனங்கள் சிங்கப்பூரில் கிளைபரப்பின. எதிர்பாராத அளவுக்குச் செல்வம் குவிந்தது. பிரிட்டிஷ்காரர்கள் வெளியேறிவிட்டால் அரசே நீடித்திருக்காது என்று கூறப்பட்ட ஒரு நாடு, உலகமே ஏக்கத்துடன் பார்க்கும் அளவுக்கு முக்கிய நாடாக உருவெடுத்தது.

எந்தக் கனிம வளமும் இல்லாத, குடிநீருக்குக்கூட வெளிநாட்டை நம்பியிருக்கும் நிலையில் இருந்த சிங்கப்பூர் ஆசியாவின் முதல்நிலைப் பொருளாதார நாடாக உயர்ந்தது.

### மத நல்லிணக்கம், இன ஒற்றுமை

பொருளாதார வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தாலும், மத நல்லிணக்கம், இன ஒற்றுமை போன்றவறைப் பாதுகாத்தவர் லீ. மொழிப் பாகுபாடு வந்துவிடக் கூடாது என்பதற்காக மலாய், மாண்டரின், தமிழ், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளையும் ஆட்சி மொழியாக அறிவித்திருந்தார்.

### தமிழர்கள் மீது அதிக பாசம் கொண்டவர் லீ குவான் யூ

இயல்பாகவே தமிழர்கள் மீது அதிகப் பாசம் கொண்டவர் லீ குவான் யூ. சிங்கப்பூரைக் கட்டமைப்பதில் தமிழர்களின் பங்கு அளப்பரியது என்ற கருத்து அவருக்கு இருந்தது. அதனால் தமிழர்களுடனும் தமிழ்நாட்டுடன் அவருக்கு நெருக்கமான தொடர்பு இருந்து வந்தது.

லீ குவான் யூ பிறந்தது பணக்காரக் குடும்பம். அங்கு கண்டிப்புக்கும் குறைவிருக்காது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பில்...

வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த நால்வர் மீது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் தல்துவ பகுதியைச் சேர்ந்த 27, 36 வயதான இருவரே உயிரிழந்துள்ளனர். (ம-7)

## சுவிஸிலிருந்து...

நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா, தோணிக்கல், லக்ஸபானா வீதியில் உள்ள வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சுவிஸ் நாட்டை சேர்ந்த 27 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான சிறிதரன் அரவிந்தன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சுவிஸ் நாட்டிலிருந்து விடுமுறைக்காக தனது தாயாரின் வீட்டில் தங்கியிருந்த நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த இளம் குடும்பஸ்தர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்படுவதை அவதானித்த தாயார் வவுனியா பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மனைவி மற்றும் பிள்ளை சுவிஸ் நாட்டில் வசித்து வருவதாகவும், தற்போது குடும்பத்தை பிரிந்த நிலையில் சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்து வசித்து வந்ததாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ம-7,250)

## கொழும்பு...

வரும் ஜூலை மாதத்திற்குள் சுமார் இரண்டு மணிநேரமாக குறைக்க முடியும்" என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்

மஹவ முதல் அநுராதபுரம் வரையிலான புகையிரத பாதையின் சமிக்ஞை மற்றும் தொடர்பாடல் அமைப்பை நவீனமயப்படுத்தும் திட்டத்திற்கான ஒப்பந்தம் நேற்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் சார்பில், அமைச்சகத்தின் செயலாளர் இந்திய அரசின் கீழ் இயங்கும் IRCONE இன்டர்நேஷனல் நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் திலகரத்னே மற்றும் பராக் வர்மா ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் இந்தியன் எக்ஸிம் வங்கியால் செயற்படுத்தப்படும் இந்த திட்டத்திற்கு 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும். (ம-7)

## திலீபனின்...

பொலிஸ் திணைக்களத்தின் சட்டம், ஒழுங்கு பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டமா அதிபர் திணைக்கள பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழுவொன்று, நேற்று கொழும்பிலிருந்து உலங்கு வானூர்தியில் வந்து, யாழ் நீதவான் நீதிமன்றத்தில் அவசர மனுவொன்றை தாக்கல் செய்திருந்தனர்.

இதில், தியாகி திலீபன் நினைவு நாள் அனுஷ்டிப்பு வன்முறை வடிவம் எடுப்பதால், அவசரமாக நினைவு நாளுக்கு தடைவிதிக்க வேண்டுமென கோரிக்கை வைத்தனர்.

அத்துடன் நேற்று முன்தினம் வவுனியா பம்பைமடுவில், சிவில் உடையில் வந்து வீடியோ படம் பிடித்த புலனாய்வாளர்களின் கைத்தொலைபேசி பறிக்கப்பட்டு, காட்சிகள் அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வீடியோவை நீதிபதிக்கு திரையிட்டு காண்பித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்திற்கு எதற்காக நினைவுநாளை தடைவிதிக்க வேண்டும், பொலிஸார் நடவடிக்கையெடுத்து திருக்கலாம் அல்லவா என நீதிபதி வினவியபோது, பொலிஸ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், வன்முறை பரவலை தடுக்க நினைவு நாள் அனுஷ்டிப்பை தடை செய்ய வேண்டுமென கோரினர்.

இந்த மனு தொடர்பில் இன்று மதியம் 1.30 மணிக்கு கட்டளை பிறப்பிப்பதாக நீதிமன்றம் அறிவித்தது.

(ம-7,33,104)

## வடமராட்சியில்...

சிங்கம் (வயது-60) என்பவரே உயரிழந்தவராவார்.

கடந்த வெள்ளிக்கிழமை தாழையடிப் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த நிலையில் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,60)

## அமெரிக்க...

கில் நேற்று முன்தினம் சுமூகமான சந்திப்பொன்றில் ஈடுபட்டனர்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 78வது அமர்வில் பங்கு பற்றிய அனைத்து நாட்டுத் தலைவர்களையும் ஒன்றிணைத்து, ஜனாதிபதி பைடன் வழங்கிய ஆடம்பரமான இரவு விருந்தின் மத்தியில் இச் சந்திப்பு இடம் பெற்றது. (ம-7)

## மன்...

றோம்" என்னும் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி பவனியானது பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் வடக்குக் கிழக்கில் உள்ள மாவட்டங்களுக்கு சென்று வரும் நிலையில் 7வது நாளான நேற்று வியாழக்கிழமை மாலை 5.50 மணி அளவில் மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்தை தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்திப் பவனி வந்தடைந்தது.

பின்னர்பொதுச் சுடர் ஏற்றப்பட்டு தியாக தீபம் திலீபனின் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து பள்ளிமுனை, பனங்கட்டுக்கொட்டு, சாந்திபுரம், எழுத்தூர் மற்றும் தாழ்வுபாடு ஆகிய கிராமங்களை நோக்கி மக்களின் அஞ்சலிக்காக தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்திப் பவனி சென்றடைந்தது.

(ம-7,285)

# கொழும்பில் வாள்வெட்டு மூவர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பு - களுபோவில சாரங்கர வீதியிலுள்ள வர்த்தக நிலையத்துக்கு முன்பாக வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் வந்த சிலரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மூவர் படுகாயமடைந்துள்ளதாக கொஹுவலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)


நாகபூஷணி அதிர்ஷ்டம்

20.09.2023 லக்கி செவின் லொத்தர் சீட்டிழுப்பில் 100000/=யும் அதே தினத்தில் கப்ருக லொத்தர் சீட்டிழுப்பில் 100000/=யும் யாழ்.முகவர் கனகலிங்கம் திலகவதி ஊடாக வெல்லப்பட்டது.

கனகலிங்கம் திலகவதி ரிக்கெட் முகவரின் ரிக்கெட்டுக்களை கொள்வனவு செய்து நீங்களும் வெற்றியாளராகுங்கள். (17176)

மெகா பவர்
திகதி 21/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1592
S 25 17 22 37 57
78713

தன நிதானய
திகதி - 2023.09.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1274
E 13 37 49 81 E
01552

லக்கி 7
திகதி 21.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0070
L7 இலக்கம் 1 9
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 0 8 2 3 7 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3486
சீட்டிழுப்பு திகதி 21.09.2023
W 16 28 47 57
W 11054

ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.21
சீட்டிழுப்பு இலக்கம் 553
கன்னி 14 32 41 50 கன்னி

மஹஜன சம்பத
திகதி 2023/09/21
சீட்டிழுப்பு இலக்கம் 5244
N 3 1 9 5 6 2

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2218 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.09.21 தினம் வியாழக்கிழமை
48 56 60 75 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,042,364.40
33880 441

சனிதா
திகதி 2023.09.21 வெற்றி வாரம் 4379 வர்ணம் சிவப்பு
01 15 45 67 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,191,400.00
91352 164

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3930 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.21 தினம் வியாழக்கிழமை
08 12 21 51 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000/-
78004 860

கப்ருக
திகதி 21.09.2023 வெற்றி வாரம் 1394
A 30 14 15 68 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 442,695,774.20
79119 878
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk

சம்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 630 திகதி 2023-09-21 வர்ணம் நீலம்
M 05 57 63 04
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.11,520,256.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2044
சீட்டிழுப்பு திகதி : 2023.09.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,137,464/-
27 53 62 68 K
25987 561


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17175)

076 825 7716 (ஆகாஸ்)


## கோழி இறைச்சி ரூ. 100 ஆல் குறைப்பு

ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலையை 100 ரூபாவால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கோழி இறைச்சியின் விலை குறைப்பு குறித்து வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ மற்றும் கோழி உற்பத்தியாளர்களுக்கு இடையிலான விசேட கலந்துரையாடலொன்று நேற்று நடைபெற்ற நிலையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)


## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7273)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

## IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல. 53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17142)

## காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு தபால் பெட்டி வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பருத்தித்துறை வீதியில் இருந்து 50 மீற்றர் தொலைவில் (17178)

077 923 1945

## அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு



- நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
- இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் (C-7301)

சம்பளம் - 60,000/- (3 மாதம்)

V2 TRAVELS - 0777-068-777

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-7301)

VISA • STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்.

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம். / V2 TRAVELS
0777-068-777

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 90 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.

தொடர்பு
077 623 4204
076 755 8606
077 076 0389
(17180)

## CANADA VISA

1)Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3)Student Visa-IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.(jan 2024)
4)Work and Study Program - Course fee after Visa மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Contact : VISA Consultant,
136, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584 (17179)

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE



யாழ் - கொழும்பு 2,900/=
வடமராட்சி - கொழும்பு 2,700/= (17019)

T.P:077 544 8503


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் திருமதி கார்த்திகேசு குணபாக்கியவதி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.07.1944 | 23.08.2023 |

திதி : ஸப்தமி

உணர்வோடு கலந்திட்ட எம்முயிர்த்தாயே
உம் பிரிவால் வாடுகின்றோம் உறவுகளும்
பிள்ளைகளும் அன்பு பண்பு அறிவு திறன்
இவையனைத்துக்கும் நீரே அம்மா எமக்கு
இவ்வுலகின் முதல் தாயே அம்மா வேராக
இருந்து விழுதுகளை உய்வித்தீர் இன்று
விழுதுகள் மட்டும் வேரிழந்து நிற்கிறதே
அம்மா இனி எங்கள் வாழ்வுதனில் ஏழேழு
தலைமுறைக்கும் நீங்கள்தான் குலதெய்வம்

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 22.09.2023 வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிற்றம்பலம் வீதி,
உசன், மிருசுவில். (17174)

தகவல்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org